ITUM
INSTITUTE OF TECHNOLOGY
UNIVERSITY OF MORATUWA

මොරටුව විශ්වවිද්‍යාලයීය තාක්ෂණික ආයතනය

වාර්ෂික වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්

2024

# தொழில்நுட்ப நிறுவனம் மொரட்டுவைப் பல்கலைக்கழகம்

## ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்

2024

# INSTITUTE OF TECHNOLOGY UNIVERSITY OF MORATUWA

## ANNUAL REPORT & ANNUAL ACCOUNTS

2024



# தொழில்நுட்ப நிறுவனம்
# மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
# ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்
# 2024

இவ் வருடாந்த அறிக்கையானது நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையினால், 2025 மார்ச் 20 ஆம் திகதி இடம்பெற்ற அதன் 271 வது கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டது.

# உள்ளடக்கம்

## நிறுவகத்தின் விபரங்களும் நிறுவனக் கட்டமைப்பும் 01


- பணிப்பாளரின் மீளாய்வு 01
- தொலைநோக்கு, பணிநோக்கு 02
- இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் 03
- மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகமானது இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் அதனால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் - 2024 டிசம்பர் வரை. 05
- மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் எதிர்காலத் திட்டம் பற்றிய அறிக்கை 09
- மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் தாபிப்பு மற்றும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஆகியன பற்றிய சுருக்கமான வரலாறு 13
- நிறுவனக் கட்டமைப்பு – ITUM 14
- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி பற்றிய சுருக்கமான அறிமுகம் 15
- முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்கள் 17
- தொடர்புகொள்வதற்கான தகவல்கள் 18


## கல்வி, நிர்வாகம் மற்றும் மாணவர் சார்ந்த ஈடுபாடு 02


- பணியாட்டொகுதி மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் 20
- மாணவர்கள் பற்றிய விபரங்கள் 22
- கல்விசார் மற்றும் கல்வி சாரா பணியாட்டொகுதியினர் பற்றிய விபரங்கள் 23


## ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பங்களிலான முன்னேற்றம் 03


- ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள 25
- நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் 33
- மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரின் செயற்பாடுகள் 40


## நிதி சார்ந்த கண்ணோட்டமும் செயலாற்றுகையும் 04


- மீண்டெழும் செலவினம் பற்றிய விபரங்கள் 42
- நிதி முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (செலவினம்) 42
- பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் 43
- நிதிசார் செயலாற்றுகை பற்றிய பகுப்பாய்வு - 2024 43
- நிலையான அபிவிருத்தி இலக்குகள் 44
- நிதி அறிக்கைகள் - 2024 51
- நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் - 2024 56
- குணக்காய்வுக் குழுவின் அறிக்கை 63
- தலைமை கணக்காய்வாளர் அறிக்கை 71
- தலைமை கணக்காளர் அறிக்கைக்கு பதில் 78

# பணிப்பாளரின் மீளாய்வு



## 2024 ஆம் ஆண்டுக்கான மீளாய்வு

நான், மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2024 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதிக்கான வருடாந்த அறிக்கையினைச் சமர்ப்பிதனையிட்டு பெருமிதமடைகின்றேன்.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகமானது (ஐவுருஆ), சிவில், இரசாயன, பல்படியம் (பொலிமர்), புடவை, இயந்திரவியல், மின்னியல், இலத்திரனியல், கடல்சார், கப்பல்துறை, தகவல் தொழில்நுட்பம் போன்ற பத்து வகையான பல்வேறு பொறியியல் துறைகளை உள்ளடக்கிய, தொழில்நுட்பக் கல்வித்துறைகயில் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது. க மானியங்கள் ஆணைக்குழுவுடனும் இணைந்து நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அளவுகோல்களுக்கு அமைவாக, தகைமைபெற்ற மாணவர்களுக்க தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை வழங்கி வருகிறது.

உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற பல கல்வி நிறுவனங்கள் எதிர்கொள்வதைப் போன்றே, 2024 ஆம் ஆண்டும் ஐவுருஆ இற்கு சாதனைகளையும் மற்றும் சவால்களையும் கொண்ட ஆண்டாக விளங்குகின்றது. நிதிக் கட்டுப்பாடுக் காரணிகள் குறிப்பிடத்தக்க சிரமங்களை ஏற்படுத்தியதோடு, கல்விசார்ந்த முன்னேற்றங்களையும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளையும் பாதிக்கும் வகையில் இருந்தன. மேற்படி சவால்களுக்கு மத்தியிலும், கல்வி நடவடிக்கைகளுக்கான குறிப்பிட்ட கால எல்லைக்குள் அனைத்து திட்டமிடப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு நிறுவனத்தினால் முடியுமாக இருந்தது. நுடாத்தப்பட்ட அனைத்துப் பரீட்சைகளின் பெறுபேறுகளும் திட்டமிடப்பட்டவாறு வெளியிடப்பட்டதோடு, பல்வேறு கல்வி, சமூக, கலாச்சார மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளும் வினைத்திறன் மிக்க முறையில் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை, பின்னடைவுகள் பெருமளவிற்கு குறைக்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டுக் காலத்தில், ஐவுருஆ இனால் முன்னெடுக்கப்பட்ட பிரதான நிகழ்வுகளில், ஐவுருஆ சர்வதேச ஆராய்ச்சி பற்றிய மாநாடு, ஐவுருஆ தொழில் வழிகாட்டல் கண்காட்சி, மற்றும் இயந்திர மனிதன் (ரோபோடிக்) போட்டிகள் போன்றனவும் நிறுவனத்தின் மற்றுமொரு மைல்கல்லாக விளங்கும் வகையில் திகழ்ந்தன.

இருப்பினும், பிரதானமாக பொருளாதார நெருக்கடியின் காரணமாக கல்வி மற்றும் நிர்வாகம் சார்ந்த ஊழியர்கள் தமது பதவிளை ராஜினாமா செய்து வெளியேறியமை காரணமாக ஐவுருஆ கணிசமான சவால்களை எதிர்நோக்கியது. இந்த வெற்றிடங்களை பூரணப்படுத்த முடியாமையின் காரணமாக ஏற்பட்ட பணிச் சுமையானது எஞ்சிக் காணப்பட்ட பணியாட்டொகுதியினர் மீதே விதிக்கப்பட்டது. இதனால் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் உயர் தரத்தைப் பேணுவது கடினமாக இருந்தது.
மேலும், கல்வி அமைச்சினுள் ஏற்பட்ட நிதி சார்ந்த பிரச்சினைகள் ஒதுக்கப்பட்ட நிதியை வழங்குவதில் தாமதத்திற்கு வழிவகுத்தன, இது நிறுவனத்தின் நிதி சார்ந்த விவகாரங்களை நிர்வகிப்பதில் மேலதிக தடைகளை உருவாக்கியது. இத்தகைய நிலைமைக்கு மத்தியிலும், ஐவுருஆ ஆனது சுய-நிதியிடல் முயற்சிகள் மூலம் நியாயமான அளவு நிதியை உருவாக்க முடிந்ததோடு, இது சில நிதிச் சுமைகளைக் குறைக்கம் உதவியது.

நான், இந்த சவால்மிக்க ஆண்டுக் காலம் முழுவதும் உறுதியானதும் மற்றும் அர்ப்பணிப்பு மிக்கதுமான தங்களது ஆதரவை வழங்கிய கல்வி, நிர்வாக மற்றும் நிதி சார்ந்த பணியாட்டொகுதியினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நான், பாடத்திட்டச் சபை, முகாமைத்துவச் சபை, மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் ஆகியோரின் மதிப்பிட முடியாத வழிகாட்டுதல்கள் மற்றும் அர்ப்பணிப்புகளுக்காகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக, எங்கள் பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில், ஐவுருஆ மீது எங்கள் மாணவர்கள் கொண்டிருக்கும் பற்று மற்றும் நம்பிக்கைக்கும் நான் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இத்தகைய சவால்களுக்கு மத்தியிலும், இலங்கையின் கல்வித் துறையில் அர்த்தமுள்ள தாக்கத்தை நாங்கள் தொடர்ந்து ஏற்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், தொழில்நுட்பக் கல்வியில் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பினை வழங்குவதில் எமது நிறுவனம் உறுதியாக உள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**பணிப்பாளர்**
**மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) எஸ். கே. திருநாவுக்கரசு RSP VSV USP**

# தொலைநோக்கு

**தொழில்நுட்பக் கல்வியில் அதிசிறந்த நிலையமாகத் திகழ்தல்.**

# பணிநோக்கு

பிராந்தியத்தில் இயங்காற்றல் மிக்கதொரு தொழில்நுட்ப நிறுவனமொன்றாக மிளிர்கின்ற அதேவேளை, பின்வரும் அம்சங்கள் ஊடாக இலங்கைச் சமூகத்தின் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக முனைப்பான பங்களிப்பினை வழங்குதல்:

- சமூகத்தினதும் மற்றும் கைத்தொழில்துறையினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அணுகக்கூடிய, நெகிழ்வான மற்றும் வினைத்திறன் மிக்க தொழில்நுட்பக் கல்வி மற்றும் திறன் பயிற்சிகளை வழங்குதல்.

- புத்தாக்கத்திற்கும் படைப்பாற்றலுக்குமான சூழலை வழங்குதல்.

- தொழில் வாய்ப்புகளுக்காக கைத்தொழில் துறை, வணிகம் மற்றும் சமுதாயம் ஆகியவற்றுடன் ஒரு முனைப்பான ஒத்துழைப்பை ஏற்படுத்தல்.

- இளம் சமூகத்தினருக்கான சமூக மற்றும் பொருளாதார வழிமுறைகளையும் மற்றும் அவற்றுக்கான வாய்ப்புக்களையும் மேம்படுத்துதல்.

# இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்

1. **பிராந்தியத்தில் முன்னேற்றகரமான மற்றும் எழுச்சிபெற்று வரும் தொழில்நுட்பக் கல்வியில் முன்னோடியாக மாறுவதோடு, உலகளாவிய தேவைக்கு ஏற்றவாறு நாட்டின் நீடுறுதிமிக்க அபிவிருத்திக்கான தகுதிவாய்ந்த மற்றும் அர்ப்பணிப்பு மிக்க பல்துறை தொழில்வாண்மையாளர்களை வழங்குவதில் முன்னணி வகித்தல்.**

1.1. சமூகத்தின் தற்கால மற்றும் எதிர்கால தேவைகளையும் உலகளாவிய கேள்வியையும் எதிர்கொள்ளும் முகமாக கல்வி சார்ந்த பாடநெறிகளின் தரத்தினை உறுதிப்படுத்தல்.

1.2. கைத்தொழில் துறை சார்ந்த பயிற்சி உள்ளடக்கங்களின் தரங்கள் கைத்தொழில் தேவைப்பாட்டுடன் பொருந்துவதை உறுதிப்படுத்தல்.

1.3. தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் தொழில்நுட்பத் துறையில் எழுச்சிபெற்றுவரும் போக்கினை இனங்காண்பதற்கும் அவ்வப்பொழுது மீளாய்வுகளை முன்னெடுத்தல்.

2. **தொழில்நுட்ப முன்னேற்றம் குறித்தான ஆராய்ச்சிகளுக்கானதொரு மையமாகத் திகழ்தல்.**

2.1 புத்தாக்கம் மிக்க ஆய்வினை ஊக்குவிக்கும் நோக்கில் பணியாட்தொகுதியினர் மற்றும் மாணவர்கள் மத்தியில் ஆய்வுக் கலாசாரத்தினை விருத்தி செய்தல்.

2.2 கைத்தொழில் கேள்வி குறித்தான ஆய்வினை முன்னெடுத்தல்.

2.3 படைப்பாக்கத்திற்கும் மற்றும் புத்தாக்கத்திற்கும் தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

3. **மாணவர்களின் முழுமையான அபிவிருத்தி ஊக்குவிக்குமொரு மூலோபாயத்தினை வடிவமைக்கும் சூழலை உருவாக்குதல்.**

3.1 இணைப் பாடவிதான மற்றும் துணைப் பாடவிதானச் செயற்பாடுகள் ஊடாக ஒட்டுமொத்த அபிவிருத்தியையும் ஊக்குவித்தல்.

3.2.மாணவர்களின் ஆளுமை அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.

3.3 தேவையுடைய மாணவர்களுக்கான ஒரு நலன்புரி முறைமையினை ஊக்குவித்தல்.

4. **கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளில் சிறந்து விளங்கும் வகையில் தகைமையுடைய மற்றும் ஊக்குவிக்கப்பட்ட பணியாட்தொகுதியினரை விருத்தி செய்தல்.**

4.1 பணியாட்தொகுதியினரின் தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

4.2 மாணவர், பணியாட்தொகுதியினர் அபிவிருத்தி அலகின் பணியெல்லையினை வளமூட்டுதல்.

# இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்

**5. மிகச் சிறந்த நிர்வாகப் பொறிமுறையுடன் கூடிய, நிதி ரீதியில் உறுதியான மற்றும் தன்னிறைவு பெற்ற நிறுவனமாகத் திகழ்தல்.**

5.1. தற்போதுள்ள நிதி முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தி அதனை பலப்படுத்தல்.

5.2 நிறுவனத்திற்கான வருமான உருவாக்கத்தினை மேம்படுத்தல்.

5.3. நிர்வாகப் பணியாட்டொகுதியினரின் ஆற்றலையும் அவர்களின் வினைத்திறனையும் மேம்படுத்தல்.

5.4 நிர்வாகத் தொழிற்பாடுகளின் கொள்திறனை மேம்படுத்தல்.

**6.மிகச் சிறந்ததொரு நிலையினை அடைந்துகொள்ளும் வகையில் தற்போதைய வசதிகளை தரமுயர்த்தல்.**

6.1 தங்குமிட வசதிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

6.2 அதிநவீன வசதியுடைய ஆய்வுகூடங்கள், நூலகங்கள், சிமியுலேட்டர் அறைகள் மற்றும் விரிவுரை அறைகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்தல்.

6.3 பரீட்சை சார்ந்த நடவடிக்கைகளுக்கான வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

**7.டிஜிடல் நிலைமாற்றத்தின் ஊடாக இயக்கப்பாட்டில் சிறந்ததொரு நிலையினை அடைதல்.**

7.1 இயக்கப்பாட்டில் சிறந்து விளங்கல் மற்றும் டிஜிடல் நிலைமாற்றம் போன்றவற்றுக்கான திறன்களைக் கட்டியெழுப்பல்.

**8.நிறுவனத்தின் அனைத்து மட்டங்களையும் இணைத்துக்கொண்டு ஒரு உயர் தரம் மிக்க தர முகாமைத்துவ முறைமையினை விருத்தி செய்தல்.**

8.1 ITUM இற்கானதொரு விரிவான தர முகாமைத்துவ முறைமையினை உறுதி செய்தல்.

**9.வினைத்திறன் மிக்க எரிசக்தி உபயோகம் ஊடாக சுற்றாடல் சார்ந்த நீடுறுதித் தன்மையினை உறுதிப்படுத்தல்.**

9.1 இயக்கப்பாடு சார்ந்த அனைத்துப் விடயப் பகுதிகளிலும் வினைத்திறன் மிக்க எரிசக்தி உபயோகம் மற்றும் சுற்றாடல் நேயம் கொண்ட நிறுவனத்தைத் தாபித்தல்

**10. இலங்கையில் முழு அளவிலானதொரு தேசிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக விளங்குதல்.**

10.1 தேசிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கான அந்தஸ்தினை அடைதல்.

## மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனமானது இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் அதனால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் - 2024 டிசம்பர் வரை.

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனமானது, ITUM இன் இடமாற்றம் மற்றும் அபிவிருத்தி பற்றிய கருத்திட்டத்தின் கீழ், கற்கைத் துறைகளை விரிவாக்கம் செய்து உள்வரும் மாணவர்களை அதிகரிக்கும் நோக்கில்;, ரூபா 10.2 பில்லியன் செலவில் ஹோமாகம, தியகமவில் எழில் மிக்க இயற்கைத் தோற்றத்துடனும், கட்டடக் கலை அடிப்படையிலும் அனைத்து முழுமையான அதிநவீன வசதிகளையும் கொண்டதொரு கட்டடத்திற்கு 2017 மே மாதத்தில் இடமாற்றப்பட்டது. நிறுவகமானது, 2023 டிசம்பர் மாதம் வரை அடைந்த முன்னேற்றம் பற்றிய விபரங்கள் கீழ் தரப்பட்டுள்ளன

**1. கடந்த மூன்று வருடங்களில் மாணவர்களின் உள்சேர்ப்பு**

2000 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து கடந்த 17 வருடங்களாக தொழில்நுட்ப நிறுவகத்திற்கான மாணவர் உட்சேர்ப்புக்களின் எண்ணிக்கை 350 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், நிறுவனம் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து 2018 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையில் 480 வரை அதிகரிக்கப்பட்டதோடு, 2020 ஆம் ஆண்டாகும்போது நிறுவகத்தின் உட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 800 மாணவர்களாக, அதாவது, நூற்றுக்கு நூறு சதவீதத்தைத் தாண்டிய ஒரு துரித வளர்ச்சியை எட்டியது.

| பாடநெறிகள் | 2022 | | | 2023 | | | 2024 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இரசாயனவியல் | 50 | M | 30 | 50 | M | 31 | 50 | M | 17 |
| | | F | 20 | | F | 19 | | F | 33 |
| சிவில் | 200 | M | 151 | 192 | M | 134 | 201 | M | 132 |
| | | F | 49 | | F | 58 | | F | 69 |
| மின்னியல் | 100 | M | 80 | 101* | M | 89 | 99 | M | 75 |
| | | F | 20 | | F | 12 | | F | 25 |
| இலத்திரனியலும் தொலைத்தொடர்பும் | 100 | M | 64 | 100 | M | 84 | 100 | M | 73 |
| | | F | 36 | | F | 16 | | F | 27 |
| பொறிமுறை | 100 | M | 88 | 101* | M | 93 | 100 | M | 54 |
| | | F | 12 | | F | 8 | | F | 46 |
| கடல்சார் | 20 | M | 20 | 20 | M | 20 | 20 | M | 20 |
| | | F | - | | F | - | | F | - |
| கப்பல்துறை | 20 | M | 20 | 20 | M | 20 | 20 | M | 19 |
| | | F | - | | F | - | | F | 01 |
| பொலிமர் (பல்படி) | 45 | M | 27 | 50 | M | 26 | 50 | M | 28 |
| | | F | 18 | | F | 24 | | F | 22 |
| புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம் | 60 | M | 26 | 60 | M | 22 | 60 | M | 22 |
| | | F | 34 | | F | 38 | | F | 28 |
| தகவல் தொழில்நுட்பம் | 100 | M | 64 | 100 | M | 65 | 100 | M | 53 |
| | | F | 36 | | F | 35 | | F | 47 |
| மொத்தம் | **795** | | | **794** | | | **800** | | |

* மூ விலக்களிப்புப் பெற்றுவந்த 02 மாணவர்களின் உட்சேர்ப்பும் உள்ளடங்குகின்றது (முப்படைகள்) - இரண்டு சிவில் மாணவர்கள்

## 2. இருபருவ கல்வித்திட்ட (செமஸ்டர்) முறைமை

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகமானது ஹோமாகம, தியகமவில் இடமாற்றம் செய்யப்படுவதற்கு முன்னர், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தினை வருடாந்தம் வழங்கி வந்தது. இருப்பினும், தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியினால் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான ஆய்வொன்றைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை இருபருவ கல்வித்திட்ட முறைமையின் அடிப்படையில் முன்னெடுப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இதனால், மூன்று வருட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டமானது 6 அரையாண்டுப் பருவங்களைக் கொண்ட ஒரு நிகழ்ச்சித் திட்டமாக அதாவது, 4 அரையாண்டுகளைக் கொண்ட ஒரு கல்விசார் நிகழ்ச்சித் திட்டமாகவும்;, 2 அரையாண்டுகளைக் கொண்ட ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமாகவும்; மாற்றமடைந்தது.

## 3. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான கல்விசார் மதிப்புக்கள்

கற்கைக்கான ஒவ்வோர் அரையாண்டும் 25 கல்விசார் மதிப்புக்களைக் கொண்டுள்ளதோடு, பயிற்சிக்கான ஒவ்வொரு அரையாண்டுக்கும் 06 மதிப்புக்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கு மொத்தமாக 112 முழுமையான மதிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 4. நிர்வாகமும் நிதியும்

நிறுவனமானது, 2017 ஆம் ஆண்டிலும் 2020 ஆம் ஆண்டிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிப் பதவிகளை நிரப்புவதற்கு உள்ளக இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் மற்றும் வெளியக விண்ணப்பம் கோரல்கள் போன்ற செயற்பாடுகள் மூலம் முகாமைத்துவம் செய்ய அதனால் இயலுமாக இருந்தது. 2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பணியாட்குழுவினர் பற்றிய விபரத்தினை நிறுவகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு (DMS) சமர்ப்பித்தது. எனினும், அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

நிறுவகத்தின் கற்கைப் பிரிவுகளின் விபரம் வருமாறு:-

பொலிமர் (பல்படி) மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம்
இயந்திரப் பொறியியல் தொழில்நுட்பம்
கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்
புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்
சிவில் பொறியியல் தொழில்நுட்பம்
இடைப் பாடவிதான கற்கைகள்
மின்னியல், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் தொழில்நுட்பம்
தகவல் தொழில்நுட்பம்

இடைப் பாடவிதான கற்கைகள்; பிரிவின் கீழானதொரு இணைப்பு அலுவலர் ஒருவரின் தலைமையில் ஆங்கில மொழி கற்பித்தல் அலகொன்றை (ELTU) நிறுவுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) ஒப்புதல் அளித்துள்ளது. இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளதுடன், இவ் ஆண்டுக் காலத்தினுள் இப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெரும் எண்ணிக்கையான மாணாக்கர்கள் பயனடைந்தனர்.

பல்வேறு குறைபாடுகளையும் வெற்றிகொண்டு மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனம் பெற்றுக் கொண்ட அடைவுகள் பற்றி 2023 ஆம் ஆண்டுக் காலத்தின் போது பணிப்பாளரால் முகாமைத்துவ சபைக்கு அறிக்கை செய்யப்பட்டது. குறைபாடுகளை வெற்றிகொள்ளும் நோக்கில் முகாமைத்துவ சபையின் ஆலோசனைக்கமைய தொடர்ந்தும் அவசியமான சீர்படுத்தல், தடுப்பு, முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 5. தர உறுதிப்படுத்தல் அலகு (QAU)

ஏற்றுக்கொள்ளத்தக்க தரநியமங்களுக்கு ஏற்ப உள்ளக தர உறுதிப்படுத்தல் முறைமையானது நிறுவனத்தில் நீண்டகாலமாக உணரப்பட்ட தேவையொன்றாக இருந்தது. இந்த இலக்கை அடையும் நோக்கில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களின் பிரகாரம், தரம், தொடர்ச்சியான அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மிக்க செயலாற்றுகை ஆகியவற்றை உறுதி செய்வதற்காக ஒரு தர உறுதிப்படுத்தல் அலகு நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நிகழ்ச்சித்திட்ட விநியோக நடைமுறைகள் சீர்செய்யப்பட்டு தரநிலைப் படிவங்களில் பதிவு செய்யப்பட்டன. அனைத்து மட்டங்களினதும் தரத்தை உறுதி செய்யும் நோக்கில், 2024 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் தர உறுதிப்படுத்தல் அலகு மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

## 6. மாணவர்களுக்கான உள்ளக தங்குமிடம் மற்றும் பிற வசதிகளை வழங்கல்

அனைத்து மாணவர்களுக்குமான தங்குமிட வசதிகளை வழங்குவதே நிறுவகத்தின் நோக்கமாகும். இந்த அடிப்படையில்;, 1600 மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்பட்டன. இவற்றில் ஜிம் மற்றும் தரைப் பணியாளர்களின் உதவியைக் கொண்ட இரண்டு அனுபவம் வாய்ந்த உடற்கல்வி பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டுதலின் கீழ், மாணவர்களின் உளம் மற்றும் உடல் ரீதியான நலனை வளர்ப்பதற்காக உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டு வசதிகள் மற்றும் நன்கு பொருத்தப்பட்ட ஜிம்னாசியம் போன்றனவும் உள்ளன. அனைத்து மாணவர்களுக்கும் குறைந்த விலையில் உணவுகளை வழங்குவதற்காக இரண்டு உணவகங்கள் மானிய அடிப்படையில் நிறுவப்பட்டன. மருத்துவ நிலையத்தில் தகுதிவாய்ந்த மருத்துவப் பணியாளர்கள் உரிய பணி நேரத்தின் போது தயாராக உள்ளனர், மேலும் இரவில் தேவையான நேரத்தில் போக்குவரத்து சேவையைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கான வசதியும் காணப்படுகிறது.

## 7. மொரட்வை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் பணியாட்டொகுதியினருக்கான நலன்புரி வசதிகளை வழங்கல்

பணியாட்டொகுதி உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரில், பணியாளர்களுக்கான விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வெற்றிடமாகவுள்ள விடுதி அறைகளில் பல கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களுக்கும் தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் நலன்புரி சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் ஒரு பகல்நேர பராமரிப்பு நிலையத்தினையும் மற்றும் பணியாளர் உணவகம் ஒன்றினையும் நடத்துவதற்கான வசதிகளை நிறுவனம் வழங்கியுள்ளது. மாணவர்களுக்கும் பணியாட்டொகுதியனருக்குமான வங்கிச் சேவைகளை வழங்குவதற்காக ஹோமகம இலங்கை வங்கியின் ஒரு கிளை ITUM கடைத்தொகுதி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. ஒரு கார்கில்ஸ் புட் சிட்டி விற்பனை நிலையம், பேஸ்ட்ரி விற்பனை நிலையம், பணியாளர் விடுதி மற்றும் புத்தகக் கடைகள் ஆகியவை இங்கு தங்கியிருக்கும் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கு சேவை வழங்குவதற்காக இயங்கி வருகின்றன.

# மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் எதிர்காலத் திட்டம் பற்றிய அறிக்கை

**1.** நிகழ்ச்சித்திட்ட நிலைமாற்றமும் கல்விசார் அபிவிருத்தியும்

குறிக்கோள்:
பங்கீட்டாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுதல் மற்றும் நிறுவனம் வழங்குகின்ற பாடநெறிகளின் கவர்ச்சிநிலையை அதிகரித்தல் போன்ற விடயங்களை நோக்காகக் கொண்டு, தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (Nனுவு) நிகழ்ச்சித்திட்டத்தை ஒரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றாக தரமுயர்த்துதல்.

எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள்:

- மாணவர் உட்சேர்க்கையினை அதிகரித்தல்: பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிலைமாற்றத்துடன், டிப்ளோமா பாடநெறியை விட ஒரு பட்டப்படிப்பினை மேற்கொள்ள விரும்புகின்ற மாணவர்கள் உள்ளடங்கலான அதிக மாணவர்களை உட்சேர்த்துக் கொள்வதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்றது. இது வருடாந்த மாணவர் உட்சேர்ப்பிலும் மற்றும் ஒட்டுமொத்த மாணவர்களின் தொகையிலும் ஒரு நிலையான அதிகரிப்புக்கு வழியமைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- பாடவிதானத்தை மேம்படுத்தல்: புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது, சமீபத்திய கைத்தொழில்துறை போக்குகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கி இற்றைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தினைக் கொண்டதாக விளங்கவுள்ளதோடு, இது மாணவர்களை தொழில் சந்தைக்கு ஏற்றவாறு சிறப்பான தயார்படுத்தலுக்கும் வழியமைக்கும்.

- கைத்தொழில் தொடர்புகளை வலுவூட்டல்: இந்தப் பட்டப்படிப்புத் நிகழ்ச்சித்திட்டத்தில் முன்னேற்றகரமான கைத்தொழிற் பயிற்சி தரநியமங்கள் மற்றும் விரிவான தொழில் வழிகாட்டுதல் அம்சங்கள் போன்றனவும் அடங்குவதோடு, இது கைத்தொழில் துறைசார்ந்த பங்காளர்களுடனான வலுவான உறவுகளை வளர்ப்பதற்கும் மற்றும் மாணவர்களுக்கு மேம்பட்ட தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கும் உதவும்.

2. வள உபயோகம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

குறிக்கோள்:
தற்போதைய பாடநெறியை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமாக மாற்றுவதற்கு ஆதரவாகவும், அதிகமான மாணவர்களுக்கு வசதியளிக்கும் வகையிலும், தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகள், மனித வளங்கள் மற்றும் பொது நிதிகள் போன்றவற்றை வினைத்திறன் மிக்க முறையில் உபயோகித்தல்.

எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள்:

- வினைத்திறன் மிக்க வள உபயோகம்: குறித்த நிலைமாற்றமானது, வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், மற்றும் விடுதி வசதிகள் போன்றன உள்ளிட்ட நிறுவகத்தின் பௌதீக உட்கட்டமைப்பு வளங்கள் சிறந்த முறையில் உபயோகிக்கப்படுவதற்கும், மற்றும் கற்கைப் பீடங்களினதும் பணியாட்தொகுதியினதும் தொழில்வாண்மை சிறந்த முறையில் உபயோகிக்கப்படுவதற்கும் வழியமைக்கும்.

- நீடுறுதிமிக்க எரிசக்தித் தீர்வுகள்: நிறுவனமானது தற்போதைய எரிசக்தி தேவைகளுக்கும் கிடைக்கக்கூடிய நிதிக்கும் இடையிலான இடைவெளியை நிவர்த்தி செய்யும் நோக்கில், நீடுறுதியும் செலவுச் சிக்கனமும் கொண்ட மாற்று எரிசக்தி வளங்களைப் பெறுதல் பற்றி ஆராய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

- வசதிகளின் விரிவாக்கம்: மாணவர் தொகை அதிகரிப்பதனால், பாடத்திட்ட விரிவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் மற்றும் தரமான கல்வியை உறுதி செய்வதற்குமாக, புதிய கட்டிடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆய்வுகூடங்கள் போன்றன உள்ளிட்ட மேலதிக வசதிகள் விருத்தி செய்யப்படக் கூடும்.

3. நிதி சார்ந்த நிலைத்திருப்பும் சுய-நிதியிடல் முயற்சிகளும்

குறிக்கோள்:
சுய-நிதியிடல் செயற்பாடுகள் மற்றும் வினைத்திறன் மிக்க பாதீட்டு முகாமைத்துவம் ஆகியவற்றினூடாக நிறுவனத்தின் நிதி சார்ந்த நீடுறுதித் தன்மையினை மேம்படுத்தல்.

எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள்:

- வருமான அதிகரிப்பு : ஆய்வு ஒத்துழைப்புகள், ஆலோசனை சேவைகள் மற்றும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சுய-நிதியிடல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் ஊடாக, நிறுவனமானது அதன் இயக்கப்பாட்டு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவும் வகையிலான அதிக வருமானத்தை ஈட்ட முடியும்.

- செலவு முகாமைத்துவம்: பொது நிதிகளை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதி மிக்க வகையிலும் உபயோகிப்பதை உறுதி செய்யும் வகையில், நிறுவனமானது தொடர்ந்தும் செலவினைக் குறைத்து, வினைத்திறன் மிக்க முறையில் வளங்களை உபயோகிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது.

4. நிறுவன ரீதியான அபிவிருத்தியும் பங்கீட்டாளர் ஈடுபாடும்

குறிக்கோள்:
தொழில்நுட்ப நிறுவனத்தை அதன் தரம் மிக்க கல்வி நடவடிக்கைகள், நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய வசதிகள், மற்றும் உறுதியான கைத்தொழில் துறை உறவுகள் போன்ற அம்சங்களைக் கொண்ட புகழ் பெற்றதொரு முன்னணி கல்வி நிறுவனமாக நிலைநிறுத்தல்.

எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள்:

- நற்பெயரைக் கட்டியெழுப்பல்;: மேம்பட்ட வசதிகளைக் கொண்ட மற்றும் நவீன பாடத்திட்டத்துடன் இணைந்ததானதொரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் ஊடாக, நிறுவனத்தின் நற்பெயரை வலுப்படுத்தி, உயர் திறமையுடைய மாணவர்களையும் கற்கைப் பீடங்களையும் ஈர்ப்பதற்கு வழியமைத்தல்.

- பங்கீட்டாளர் திருப்தி: ஒழுங்குமுறையான பின்னூட்டல்கள் மற்றும் ஒத்துழைப்புக்களுடன் கூடிய மாணவர்களினதும், பணியாட்டொகுதியினரினதும் மற்றும் பிற பங்கீட்டாளர்களினதும் ஈடுபாடானது, நிறுவனம் அதன்; தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் தொடர்ந்து பூர்த்தி செய்வதை உறுதி செய்தல்.

- நீண்டகால மூலோபாயத் திட்டம் : நிறுவனமானது, அதன் கல்வி நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தி, அதன் நற்பெயரினை விரிவுபடுத்தும் வகையில், ஒரு புதிய பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான வாய்ப்புகள் உள்ளிட்ட நீண்டகால மூலோபாயத் திட்டம் தொடர்பில் பணியாற்றுதல்.

# மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனத்தின் வசதிகள்

வருமானத்தை ஈட்டும் நோக்கில், பல்நோக்கு மண்டபம், கேட்போர்கூடம், பணியாட்டொகுதியினர் அபிவிருத்தி நிலையம், விருந்தினர் இல்லம் மற்றும் கடைத்தொகுதி போன்ற வசதிகளும் விளம்பரம் ஊடாக ஊக்குவிப்புச் செய்யப்பட்டுள்ளன.

மின்சாரக் கட்டணத்தை ஈடுசெய்யும் வகையில் கூரை உச்சியில் சூரிய மின்சக்தி அமைப்பை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்யவதற்கான நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டுள்ளதோடு, ITUM கடைத்தொகுதி வளாகத்தில் உள்ள அனைத்து கடைகளையும் மற்றும் பொதுமக்களுக்கான பொதுவான வசதிகளையும் முன்னுரிமை அடிப்படையில் வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நூலக வசதிகள்

நிறுவனத்தின் கற்றல் நடவடிக்கைகளின் போது, தகவல்களைப் பெறுவதற்கும் மற்றும் கற்றலுக்குமான சூழலுக்கான அணுகல் வசதிகளை சரியான நேரத்திலும் காத்திரமாகவும் வழங்குவதன் மூலம் நூலகம் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்றது. இது அச்சிடப்பட்ட வடிவத்திலும் மற்றும் இலத்திரனியல் வடிவத்திலும் ஏராளமான தகவல் வளங்களைப் பாதுகாத்து வருவதோடு, இதனை http://opac.itum.mrt.ac.lk. எனும் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொள்ளவும் முடியும். நூலகம் ஊடாக பல்வேறு சேவைகளும் வசதிகளும் நிறுவனம் சார்ந்த கல்வி மைய வகிபாகங்களை ஈட்டும் நோக்கிலேயே வழங்கப்படுகின்றன. நூலகமானது நிறுவனத்தின் பிரதான கட்டடத்தின் 2ஆம் மாடியில் அமையப்பெற்றுள்ளது. இது வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.15 மணி வரையும், மற்றும் சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரையும் இயங்கி வருகிறது. பரீட்சைகள் இடம்பெறும் காலப்பகுதியில் சனிக்கிழமை தினங்களில் அதன் சேவை வழங்கும் நேரங்கள் நீடிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப அறிவு மைய உலகை கண்டுகொள்ள எமது நூலகத்திற்கு வருமாறு நாங்கள் அன்புடன் அழைக்கின்றோம். (http://web.itum.mrt.ac.lk/library).



# மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனத்தின் தாபிப்பு மற்றும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஆகியன பற்றிய சுருக்கமான வரலாறு

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) பாடநெறியானது மருதானை கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்தே தோற்றம் பெற்றதாகும். இது இரண்டு வருடகால கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (JTO) பாடநெறி மற்றும் நான்கு வருடகால தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஆகியவற்றைக் கொண்டு விளங்கியதோடு, இது நாட்டின் பொறியியல் துறையின் அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பினையும் வழங்கியது.

**1960**

ஆம் ஆண்டில், கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பாடநெறியானது, நடைமுறைப் பயிற்சி மைய நடுத்தர பொறியியல் தொழில்நுட்ப பாடநெறிகளை வழங்கும் நோக்குடன் கனடாவின் உதவியுடன் மொரட்டுவை, கட்டுபெத்தவில் தாபிக்கப்பட்ட பிரயோக தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (IPT) மாற்றப்பட்டது.

பிரயோக தொழில்நுட்ப நிறுவகமானது சிலோன் தொழில்நுட்பக் கல்லூரியாக (CCT) தரமுயர்த்தப்பட்டதோடு, இது துரித அபிவிருத்தி மற்றும் பாடநெறி வகையாக்கம் போன்றவற்றுக்கு வழியமைத்தது.

**1966**

ஐந்து வருட காலமுடைய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு, கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பாடநெறியானது, ஒரு வருடகால பயிற்சியுடன் கூடிய மூன்று வருடகால தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியாக மாற்றம் பெற்றது.

**1972**

சிலோன் தொழில்நுட்பக் கல்லூரியானது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக மாறியதோடு, பின்னர் அது மொரட்டுவை பல்கலைக்கழகமாக எழுச்சி பெற்றது.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியானது உயர் கல்வி அமைச்சின் சார்பில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்டது.


**1978**

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியானது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 29(உ) வின் பிரகாரம், க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்ற தகைமையுடன் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் ஒரு உள்ளகப் பாடநெறியாக மாற்றப்பட்டது.

**2000**

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனமானது, 2000 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டதொரு தனியான நிறுவனத்தின் கீழ் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் அதனையொத்த பிற பாடநெறிகளை வழங்கும் நோக்கில் தாபிக்கப்பட்டு, அது முகாமைத்துவச் சபையொன்றின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

# நிறுவனக் கட்டமைப்பு - ITUM



## தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி பற்றிய சுருக்கமான அறிமுகம்

பல்வேறு துறைகளிலும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கான பொறியியல் துறை சார்ந்த டிப்ளோமாதாரிகளை உருவாக்குவதே இந்தப் பாடநெறியின் முதன்மை நோக்கமாகும். நிறுவனமானது இந்தப் பாடநெறியை 10 வகையான பல்வேறு துறைகளில் மொத்தமாக 800 மாணவர்களுக்கு நடத்தி வருகிறது. அது பற்றிய விபரம் பின்வருமாறு:

| கற்கைத் துறைகள் | உட்சேர்ப்பு எண்ணிக்கை |
|---|---|
| இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம் | 50 |
| சிவில் பொறியியல் தொழில்நுட்பம் | 200 |
| மின் பொறியியல் தொழில்நுட்பம் | 100 |
| இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் தொழில்நுட்பம் | 100 |
| கடல் சார் பொறியியல் தொழில்நுட்பம் | 20 |
| இயந்திரப் பொறியியல் தொழில்நுட்பம் | 100 |
| குடல்சார் கற்கைகள் | 20 |
| பாலிமர் தொழில்நுட்பம் | 50 |
| புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம் | 60 |
| தகவல் தொழில்நுட்பம் | 100 |

இது தவிர, நாட்டின் பாதுகாப்புப் படையினர் மற்றும் பல்கலைக்கழக தொழில்நுட்ப பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கென அதிகபட்சம் ஐந்து மாணவர்களை உட்சேர்ப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒரு முழுநிலை டிப்ளோமாதாரி ஒருவர் ஆரம்பத்தில் தொழில்வாண்மைப் பொறியாளர் அல்லது முகாமையாளருக்கும் கள மட்டப் பணியாளர்களுக்கும் இடையிலான பாலமாகச் செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு டிப்ளோமாதாரி, தொழில்வண்மை ரீதியில் வளர்ச்சியடைந்து, தனது தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதையே மேற்படி வகிபாகம் வலியுறுத்துகின்றது. அவரவர், தெரிவு செய்யும் துறையில் கற்று தன்னைத் தானே அவரவர் பயிற்றுவிப்பதன் மூலம் தனது புத்தாக்கம் வடிவமைப்புக்கு தொழில்வாண்மைப் பொறியியலாளர்களின் பாராட்டு கிடைப்பதோடு, இது கீழ்நிலை உத்தியோகத்தருடனான தொடர்பினைப் பேணுவதற்கும் தனது புத்தாக்கம் வடிவமைப்பினை யதார்த்தமாக்குவதற்கும் வழியமைக்கின்றது.

இந்தப் பாடநெறியானது இரண்டு வருட கல்விசார் கற்கைக் காலத்தையும், ஒரு வருட கைத்தொழில்சார் பயிற்சிக் காலத்தையும் கொண்டு 06 செமஸ்டர்களில் வழங்கப்படுகிறது. முதல் மற்றும் இரண்டாம் செமஸ்டர் தொகுதிகள், பிரதானமாக மாணவர்களின் அடிப்படை விஞ்ஞான அறிவினை சமநிலைப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், அதனை மேம்படுத்தவும் வடிகமைக்கப்பட்டுள்ளதோ, அவரவர் தேர்ந்தெடுத்துள்ள சிறப்புப் படிப்புத் துறைக்கானதொரு அறிமுகத்தை வழங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது பொறியியல் நடைமுறையில் தேவைப்படும் சில அடிப்படைத் திறன்களை (உதாரணமாக, செயலமர்வுத் தொழில்நுட்பம், பொறியியல்சார் வரைதல்கள்) வெளிப்படுத்தும்.

பின்வரும் அம்சங்களின் காரணமாக முதலாம் மற்றும் இரண்டாம் செமஸ்டர்களின் பொழுது ஆங்கில மொழி ஒரு முக்கிய பாடமாக விளங்குகின்றது:

- NDT பாடநெறியானது ஆங்கில மொழியிலேயே முன்னெடுக்கப்படுகிறது. அநேக மாணவர்கள் தனது இரண்டாம் நிலைக் கல்வி வரையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலேயே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள காரணத்தினால், ஆங்கில மொழிப் பாடநெறியானது மாணவர்களின் தொடர்பாடல் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகும்.
- ஒரு டிப்ளோமாதாரி வாழ்வில் தொடர்பாடல் திறன் ஒரு இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது. இதனால், மாணவர்கள் கிரகித்தல், பேச்சு மற்றும் அறிக்கை எழுதுதல் போன்றவற்றில் தனது திறமைகளை விருத்தி செய்வதற்கு வேண்டப்படுகின்றனர்.

மூன்றாம் மற்றும் நான்காம் செமஸ்டர்கள் கொண்டுள்ள பாடத் தொகுப்பானது தெரிவுசெய்யப்பட்ட கற்கைத் துறையில் பல்வேறு பொறியியல் தோற்றப்பாடுகளைப் பிரயோகிப்பதனை பிரதானமாகக் கொண்டுள்ளது.

ஐந்தாவது, ஆறாவது செமஸ்டர்கள் குறித்த கைத்தொழில் துறையில் பிரயோக ரீதியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையானது (NAITA) எமது நிறுவகத்தின் பயிற்சிப் பொறியியலாளருடன் இணைந்து பயிற்சிக்கான இடங்களை ஏற்பாடுசெய்து வழங்குகின்றது.

மாணவர்களுக்கு, நான்கு கல்விசார் செமஸ்டர்களையும் இரண்டு பயிற்சிசார் செமஸ்டர்களையும் பூர்த்தி செய்வதன் பேரில், பல்கலைக்கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகைப் பிரமாணங்களின் படி சாதாரண, திறமை அல்லது அதிதிறமைச் சித்திகளுடன் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து ஒரு வருடத்திற்குள் கிட்டத்தட்ட 100 சதவீதமான மாணவர்களும் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ITUM இல் தற்போது நடைமுறையில் உள்ள கற்கைநெறிப் பாடத்திட்டமானது முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு 2005 ஆம் ஆண்டிலும்;, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு 2006 ஆம் ஆண்டிலும் அறிமுகம் செய்யப்பட்டதாகும். கைத்தொழில்மய உலகில் தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றங்களைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டு, மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் பாடத்துறைகளில் அவர்களின் அறிவினை மேலும் விரிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும். ITUM இன் இடமாற்ற மற்றும் அபிவிருத்தித் திட்டமானது, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் NDT இன் பாடத்திட்டத்தை தரமுயர்த்தவும் மற்றும் இற்றைப்படுத்தவும் உதவியதோடு, 2018 ஆம் ஆண்டு முதற்கொண்டு வருடாந்த முறையிலிருந்து செமஸ்டர் முறைக்கு மாற்றப்பட்டது.

# முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. | மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) எஸ்.கே. திருநாவுக்கரசு | பணிப்பாளர் (2021.02.16 முதல்) |
| 02. | திருமதி கே.ரி.எஸ். விஜேசிறிவர்தன | உயர்கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்டவர். |
| 03. | திரு பீ.ஆர். அஜித் விஜேசிங்க | கப்பற்றுறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்டவர். |
| 04. | கலாநிதி டப்.எம்.எஸ். விஜேசிங்க | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) தவிசாளரினால் பரிந்துரைக்கப்பட்டவர். |
| 05. | பேராசிரியர் கே.ரி.எம்.யூ. ஹேமபால | மொறட்டுவைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி |
| 06. | பேராசிரியர் (திருமதி) வை.ஜீ. சந்தநாயக்க | மொறட்டுவைப் பல்கலைக்கழக கட்டிடக்கலைப் பீடத்தின் பீடாதிபதி |
| 07. | பேராசிரியர் ரொஹான் சமரஜீவ | கவுன்சிலினால் பரிந்துரைக்கப்பட்டவர் (2023.02.16 முதல் 2026.02.15 வரை) |
| 08. | பேராசிரியர் யூ.பீ. நவகமுவ | மூதவையினால் பரிந்துரைக்கப்பட்டவர். (2023.06.21 முதல் 2026.06.20 வரை) |
| 09. | திரு ஜீ.ஜீ. ஜயரத்ன | BOS / ITUM இனால் பரிந்துரைக்கப்பட்டவர் (2023.10.12 முதல் 2026.10.11 வரை) |
| 10. | கலாநிதி (திருமதி) கே.எம்.டப்ளியு. அபேகோன் | BOS / ITUM இனால் பரிந்துரைக்கப்பட்டவர் (2023.11.10 முதல் 2026.11.09 வரை) |
| 11. | கலாநிதி பிரியந்த பிரேமகுமார | UGC இனால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள் (2023.01.16 முதல் 2026.01.15 வரை) |
| 12. | பேராசிரியர் ஜே.கே.டி.எஸ். ஜயநெத்தி | UGC இனால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள் (2023.01.16 முதல் 2026.01.15 வரை) |
| 13. | சட்டத்தரணி என்.கே. அபேரத்ன டயஸ் | UGC இனால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள் (2023.01.16 முதல் 2026.01.15 வரை) |

# தொடர்புகொள்வதற்கான தகவல்கள்

## அஞ்சல் முகவரி

தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவை பல்கலைக்கழகம்,
தியகம,
ஹோமாகம.

## தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல்


| | |
|---|---|
| பணிப்பாளர் | 0112 124001 |
| பொது | 0112 124000 |
| தொலைநகல் | 0112 117030 |
| மின்னஞ்சல் | director@itum.mrt.ac.lk |


## இணையத்தளம்


https://itum.mrt.ac.lk/

# கல்வி, நிர்வாகம், மற்றும் மாணவர் ஈடுபாடுகள்

## பிரதான சுட்டிக்காட்டல்கள்



# பணியாட்தொகுதியினர் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| பிரிவு | பாடநெறி | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | | மொத்த கல்விசார் பணியாளர்கள் | | | | மொத்த கல்விசாரா பணியாளர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிவில் பொறியியல் தொழில்நுட்பம் | NDT | பயிற்சி | 185 | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 182 | P | 09 | T | 11 | P | 05 |
| | | S II | 184 | C | 02 | V | 05 | | |
| | | S I | 201 | | | | | | |
| மின், இலத்திரனியல், மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் தொழில்நுட்பம் | NDT | பயிற்சி | 192 | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 191 | P | 09 | T | 13 | P | 10 |
| | | S II | 191 | V | 02 | | | | |
| | | S I | 199 | C | 01 | | | | |
| | | | | T | 01 | | | | |
| கடல்சார் கற்கைகள் | NDT | பயிற்சி | 36 | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 41 | P | 01 | NDA L | 09 | P | 02 |
| | | S II | 39 | C | 01 | NDA I | 02 | C | 02 |
| | | S I | 40 | | | | | | |
| இயந்திரப் பொறியியல் தொழில்நுட்பம் | NDT | பயிற்சி | 95 | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 80 | P | 06 | T | 07 | P | 22 |
| | | S II | 97 | C | 02 | V | 12 | | |
| | | S I | 100 | T | 01 | | | | |
| போலிமர் மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம் | NDT | பயிற்சி | 87 | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 77 | P | 08 | T | 05 | P | 10 |
| | | S II | 93 | V | 11 | | | | |
| | | S I | 100 | C | 02 | | | | |
| புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம | NDT | பயிற்சி | 57 | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 55 | P | 06 | V | 01 | P | 06 |
| | | S II | 60 | V | 03 | | | T | 04 |
| | | S I | 60 | | | | | | |
| தகவல் தொழில்நுட்பம் | NDT | பயிற்சி | 86 | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 94 | P | 03 | T | 10 | P | 01 |
| | | S II | 98 | C | 02 | | | | |
| | | S I | 100 | | | | | | |
| இடைப் பாடவிதான கற்கைகள் | NDT | பயிற்சி | - | **விரிவுரையாளர்கள்** | | **போதனாசிரியர்கள்** | | | |
| | | S IV | 720 | P | 08 | T | 03 | P | 03 |
| | | S II | 762 | V | 04 | V | 10 | | |
| | | S I | 800 | C | 4 | | | | |

P - நிரந்தரம் T- தற்காலிகம்

C- ஒப்பந்த அடிப்படை V- வருகைதரல்

NDA L – கடல்சார் துறை டிப்ளோமாதாரர்கள் சங்க விரிவுரையாளர்கள்

NDA I – கடல்சார் துறை டிப்ளோமாதாரர்கள் சங்க போதனாசிரியர்கள்

## ITUM இன் ஆளணியினர்

| சேவை வகை | சம்பளக் குறியீடு | அனுமதித்த பதவியினர் எண்ணிக்கை | தற்போதுள்ள பதவியினர் எண்ணிக்கை | பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| **ஆரம்ப நிலை** | | | | |
| ஆரம்ப தரம் - திறனற்ற ஊழியர் | PL – 1 | 20 | 12 | 08 |
| ஆரம்ப தரம் - நடுத்தர திறனுடைய ஊழியர் | PL - 2 | 35 | 20 | 15 |
| ஆரம்ப தரம் - திறனுடைய ஊழியர் | PL - 3 | 29 | 18 | 11 |
| **இரண்டாம் நிலை** | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சாரா ஊழியர் | U-MN 1 | 33 | 25 | 08 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப ஊழியர் | U-MT 1 | 33 | 16 | 17 |
| துணை உத்தியோகத்தர் - பகுதி 2 | U-MN 2 | 03 | 03 | 00 |
| துணை உத்தியோகத்தர் - பகுதி 1 | U-MN 3 | 04 | 04 | 00 |
| பணியாட்தொகுதி உதவியாளர் மேற்தர மற்றும் சிரேஷ்ட பணியாட்தொகுதி உதவியாளர் | U-MN 4 | 10 | 10 | 00 |
| **மூன்றாம் நிலை** | | | | |
| கல்விசார் ஆதரவு – பகுதி 2 | U-AS 1 | 07 | 02 | 05 |
| கனிஷ்ட நிறைவேற்று அதிகாரி முகாமையாளர் | U-EX 1 | 03 | 02 | 01 |
| கல்விசார் ஆதரவு – பகுதி 1 | U-AS 2 | 03 | 00 | 03 |
| தற்காலிக போதனாசிரியர் | U-AC 1 | 50 | 47 | 03 |
| **சிரேஷ்ட மட்டம்** | | | | |
| மருத்துவ அதிகாரி | U-MO 1 | 01 | 00 | 01 |
| பிரதம மருத்துவ அதிகாரி | U-MO 2 | - | - | - |
| நடுத்தர நிறைவேற்று அதிகாரிகள் | U-EX 2 | 04 | 03 | 01 |
| நடுத்தர நிறைவேற்று அதிகாரிகள் | U-EX 2(a) | 01 | 01 | 00 |
| சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள் | U-EX 3 | - | - | - |
| விரிவுரையாளர் | U-AC 3 | 79 | 51 | 28 |
| துணைப் பேராசிரியர்கள் | U-AC 4 | | | |
| பேராசிரியர்கள் சிரேஷ்ட பேராசிரியர்கள் | U-AC 5 | | | |

## மாணவர்கள் பற்றிய விபரங்கள்

சிவில், இரசாயனவியல், மின்னியல், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல், கடல்சார் கற்கை, இயந்திரவியல், கப்பற்துறைசார் கற்கை, பாலிமர், புடவை மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் பத்து பிரிவுகளிலும் 800 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர்.

| **பாடநெறிப் பிரிவு** | **உட்சேர்க்கை** | **செமஸ்டர் 2 மாணவர்கள்** | **செமஸ்டர் 4 மாணவர்கள்** | **பயிற்சி பெறும் மாணவாகள்** | **மொத்த டிப்ளோமா தாரர்கள்** |
|---|---|---|---|---|---|
| சிவில் பொறியியல் தொழில்நுட்பம் | 201 | 184 | 182 | 185 | 145 |
| மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் தொழில்நுட்பம் | 199 | 197 | 191 | 192 | 154 |
| கடல்சார் கற்கைகள் | 40 | 39 | 41 | 36 | 26 |
| இயந்திரப் பொறியியல் தொழில்நுட்பம் | 100 | 97 | 80 | 95 | 72 |
| பாலிமர் மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம் | 100 | 93 | 77 | 87 | 72 |
| புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில் | 60 | 60 | 55 | 57 | 38 |
| தகவல் தொழில்நுட்பம் | 100 | 98 | 94 | 86 | 61 |
| துணைப்பாடவிதானக் கற்கைகள் | 800* | | | | |
| **மொத்தம்** | **800** | **762** | **720** | **738** | **568** |

* குறித்த பிரிவு அனைத்து மாணவர்களுக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

### 2024 இல் காணப்பட்ட ஒவ்வொரு கல்வி ஆண்டுக்குமான மாணவர்களின் எண்ணிக்கை

| பிரிவு | பாடநெறி | உட்சேர்க்கை 2024 | 1 ஆம் வருடம் (செமஸ் 1, 2) | 2 ஆம் வருடம் (செமஸ் 3, 4) | 3 ஆம் வருடம் (செமஸ் 5, 6) | சித்தியடைந்த மற்றும் 2024 இல் பட்டமளிக்கப் பட்ட மாணவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | NDT | 800 | 762 | 720 | 738 | 568 |


# கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்தொகுதியினர் பற்றிய விபரங்கள்

| பணியாளர் வகை | சம்பள அளவுத்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் | தற்போதுள்ள ஆளணியினர் | வெற்றிடமாக உள்ள ஆளணியினர் |
|---|---|---|---|---|
| கல்விசார் பணியாளர்கள் | U-AC 3 to U-AC 5 | 79 | 51 | 28 |
| | U-AC 1 to U-AC 2 | 50 | 47 | 03 |
| நிறைவேற்றுத் தரப் பணியாளர்கள் | U-EX 1 to U-EX 3 (Administrative & Financial Staff) | 07 | 05 | 02 |
| | U-EX 1 to U-EX 3 (Other Executive Staff) | 01 | 00 | 01 |
| மருத்துவ அதிகாரிகள் | U-MO 1 | 01 | 00 | 01 |
| கல்விசார் துணைப் பணியாளர்கள | U-AS 1 | 07 | 02 | 05 |
| | U-AS 2 | 03 | 00 | 03 |
| தொழில்நுட்பப் பணியாளர்கள் | U-MT 1 | 38 | 21 | 17 |
| எழுதுவினைஞர் மற்றும் அது சார்ந்த ஊழியர்கள் | U-MN 1 | 33 | 25 | 08 |
| | U-MN 2, 3 | 07 | 07 | 00 |
| | U-MN 4 | 05 | 05 | 00 |
| ஆரம்பநிலைப் பணியாளர்கள் | U-PL 1 to U-PL 3 | 84 | 50 | 34 |
| மொத்தம் | | **315** | **213** | **102** |


# ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள்

## பிரதான சுட்டிக்காட்டல்கள்


### ஆராய்ச்சி வெளியீடுகள்




### 2024 இல் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் போட்டிகள்




### பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் போட்டிகள்



## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் பணியாட்தொகுதியினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் கண்டறிதல்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன மற்றும் அல்லது பிரசுரிக்கப்பட்டுள்ளன.

| பதிப்பாசிரியர்கள் | ஆராய்ச்சி இதழின் தலைப்பு | மாநாடு/ ஆய்விதழ்/ நூல்கள் இணைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| துணைப் பேராசிரியர் டபிள்யு.பீ.எம். தோறாதெனிய | கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் | இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் பிரசுரிக்கப்பட்ட ஆய்விதழ் |
| திருமதி எம்.எம்.பீ.டீ. சமரசேகர | இலங்கையின் பாறைச் சுரங்கங்களில் காணப்படும் வானிலையால் பாதிக்கப்பட்ட பாறைகளின் பயன்பாட்டை மேம்படுத்துதல். | ஆய்விதழ் |
| கலாநிதி கே.ஏ.பீ. வீரசிங்க | CFRP இன் நீளத்திலுமான மின்-வெப்பம் மற்றும் CFRP இன் வலுவான அடைவில் உள்ள பீம் வளைவு - செங்குத்தாக வளைந்த வட்ட வெற்றுப் பிரிவுகளை வலுப்படுத்துதல்: ஒரு பரிசோதனை ஆய்வு. | மாநாடு |
| | சடப்பொருள் பல்துறைப் பொறியியல் பற்றிய அவுஸ்திரேலிய ஆய்விதழ் | ஆய்விதழ் |
| செல்வி ஏ.டபிள்யு.தெம்பிலியா கொட | தூண்களின் குழி ஆழத்தினை மதிப்பிடுவதற்கான 1D மற்றும் 2D மாதிரியிடல் அணுகுமுறைகளின் ஒப்பீட்டு பகுப்பாய்வு: இலங்கையின் களனிசிறி பாலத்தின் ஒரு விடய ஆய்வு. | ஆய்விதழ் ,2024 செப்டம்பர் |
| | பாலத் தூண் தோண்டும் மதிப்பீட்டிற்கான எண் மாதிரியை பௌதீக மாதிரியாக்கம் மூலம் சரிபார்த்தல் - களனிசிறி பாலம் பற்றியதொரு விடய ஆய்வு. | மாநாடு<br>2024 மொரட்டுவை பொறியியல் ஆராய்ச்சி மாநாடு<br>2024 ஆகஸ்ட் |
| | பாலத் தூண்களை மதிப்பிடுவதற்கான எண் மாதிரியை பௌதீக மாதிரியாக்கம் மூலம் சரிபார்த்தல். | மாநாடு<br>சிவில் பொறியியல் ஆய்வுக் கருத்தரங்கு<br>2024 – செப்டம்பர் |
| ஜோன் ஜி.கே.பி. முணசிங்க ஏ.எம்.எம்.ஜி. வீரசிங்க, கே.ஜி.என்.எச். முற்றும் ஹல்வதுர ஆர்.யுர். | வெப்பமண்டலத்திற்கான பசுமை கூரை அடி மூலக்கூறின் வடிவமைப்பு மற்றும் மேம்பாடு. | மாநாடு<br>12வது உலக நிர்மாணத்துறை பற்றிய கருத்தரங்கு, 910 ஆகஸ்ட் 2024, இலங்கை |
| பீரிஸ் டீ.எல்.டீ.ஜீ. ரத்னாயக்க, ஆர்.எம்.கே.எம். ஜோன், ஜி.கே.பி. | இயற்கை மூலப்பொருட்களுக்கு மாற்றாக பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பறக்கும் சாம்பல்ஃபடிந்துள்ள சாம்பல் பயன்பாடு: வலிமைமிக்க பண்புகள் | ஆய்விதழ்<br>Mater Circ Econ 6, 2 (2024).<br>https://doi.org/10.1 007/s42824-023-00094-6 |
| தரங்கிகா பம்பரவானகே, டீ.எல்.எஸ். ஹன்சனீ | இலங்கையில் மின்சாரம் உற்பத்திக்கான புவியியல் எரிசக்தி வளங்கள்: தற்போதைய நிலை மற்றும் வாய்ப்புகள்: விமர்சன ரீதியான மதிப்பாய்வு | சர்வதேச மாநாடு, வருடாந்த முன்னெடுப்புக்கள் ISSN 2773-7055 |

## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| பதிப்பாசிரியர்கள் | ஆராய்ச்சி இதழின் தலைப்பு | மாநாடு/ ஆய்விதழ்/ நூல்கள் இணைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| தரங்கிகா பம்பரவானகே, எச்.எம்.எச்.என். பண்டாரநாயக்க, கே.ஜி.சீ.ஜே. சேனாரத்ன, டீ.என். தலகல, எல்.யூ. பாக்யா, எச்.எம்.சீ.எல். பண்டார | பம்ப் செய்யப்பட்ட சேமிப்பு முறைமைகளுடன் புதுப்பிக்கத்தக்க சக்தித் திறனை மேம்படுத்துதல் | சர்வதேச மாநாடு, வருடாந்த முன்னெடுப்புகள் ISSN 2773-7055 |
| எஸ்.எஸ். மொரபிட்டிய, எச்.டபிள்யு.டீ. தில்ஷான், டீ.எம்.வீ.டீ.எச். திசாநாயக்க, ஆர்.எம்.ஜி.கே. திசாநாயக்க, ஏ.ஏ.ஐ.பீ. எரங்க, ஆர்.எஸ். ரணசிங்க | எரிவாயு சேமிப்பு வசதிகளில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட முறை | SLTC இன் 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, 2023 |
| நதுன் குணவர்தன ரீ.டபிள்யு.டபிள்யு லீலாரத்ன, சுமலி எஸ் மொரபிட்டிய, டபிள்யு.பீ.சீ. வீரவர்தன | தெற்காசியாவிலும் இலங்கையிலும் 5G தொழில்நுட்பம் மற்றும் 5G ஐ பொருந்திக் கொள்ளல் பற்றியதொரு விரிவான ஆய்வு | இராணுவப் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மாநாடு 2024 |
| எஸ்.எஸ். மொரப்பிட்டிய பீ.எச்.வை.சீ. பிரியமந்தா, டி.டி. கருணாரத்ன, எம்.ஜி.பி. சாமோத், ஐ.டி.எஸ். சந்தீப், ஜி.எஸ். டிலுக்ஸி | வாகன இணைப்பை மேம்படுத்துதல்: வாகனத் தொடர்பாடலுக்கான li-fi தொழில்நுட்பம் | மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு |
| எஸ்.எஸ். மொரப்பிட்டிய ஓ.கே.டி.சி. நடேசன், பி.டி.ஐ.எஸ். பொல்வத்த, எல்.ஆர்.எஸ். மெண்டிஸ், ஜி.ஆர்.சி.எஸ். தயாவன்ச, ஜி.எச்.டி. பெரேரா | திறமையான கையுறை பிரித்தெடுக்கும் தானியக்க முறைமை | SLTC, இன் 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு 2023 |
| முஹம்மது இஸ்கந்தர் சா அத் சா அத், அஸ{ரா ஹம்சா, அஹ்மத் ஹாசிக் அய்மன் ரசூல், மஹ்ரூப் முகமது மப்ரூஸ் | மிகைப்பிக்கப்பட்ட ரியாலிட்டியில் (AR) ஒளி கண்டறிதல் மற்றும் வரம்பின் (LIDAR) செயல்திறன் பகுப்பாய்வு | கணிப்பீடு சார் சிந்தனை மற்றும் தரவு விஞ்ஞானம் பற்றிய சர்வதேச ஆய்விதழ் |
| டேனி டான் லிங் சூன், அஸ{ரா ஹம்சா, அஹ்மத் ஹாசிக் ஐமன் றசூல், மஹ்ரூப் முகமது மப்ரூஸ் | தட்டையான தன்மையைப் பெறும் வகையில் ராமன் பெருக்கிகளின் பம்ப் சக்தி மற்றும் மீடிரண்களை மேம்படுத்துதல். | இலத்திரனியல் முறைமைப் பொறியியலின் சிமாரக் சர்வதேச ஆய்விதழ் |
| ஊய் வெய் லிங், அஸ{ரா ஹம்சா, நார்லிசா முகமது, நூர் நஜஹத்துல் ஹ_ஹதா, அஹ்மத் ஹாசிக் ஐமன் ரசூல், கவ்தர் எம் முஸ்தபா, மஹ்ரூப் முகமது மப்ரூஸ் | வெவ்வேறு விகிதங்களின் SWCNT-PVA நிறைவுற்ற உறிஞ்சியுடன் Q-ஆழியுடை எல்லிரும்பு கலப்படம் செய்யப்பட்ட பைபர் லேசரின் ஒப்பீட்டு ஆய்வு. | மைக்ரோ மற்றும் நனோ பொறியியலில் முன்னேற்றகர ஆராய்ச்சி பற்றிய ஆய்விதழ் |
| ஜே.எம்.பீ. குணசேகர, எம்.டீ.ஜி.எம். கமகே, யூ.யூ. சஞ்சீவனி | பாரம்பரிய கற்பித்தல் முறைகளை மாற்றியமைத்தல்: பல்கலைக்கழக கற்பித்தல் மற்றும் கற்றல் நடைமுறைகளில் ழுநெழேவந இன் தாக்கம். | 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, 2024 |
| எம்.பீ.எஸ். விராஜ், பீ.டீ.சீ. குமார, எச்.எச்.ஈ. ஜயவீர | ஒளியியல் முறையைப் பயன்படுத்தி ஒரு பரவளைய தொட்டி செறிவூட்டியின் உகந்த குவிய உயரத்தைத் தீர்மானித்தல் | 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, 2024 |

## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| பதிப்பாசிரியர்கள் | ஆராய்ச்சி இதழின் தலைப்பு | மாநாடு/ ஆய்விதழ்/ நூல்கள் இணைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| டபிள்யு.எஸ்.ஏ. சுதர்ஷண, எல்.கே.ரீ. சிறிமால், ஆர். கல்லாகே | தென்னந்தும்பு விரிப்புகளை உற்பத்திக்கான எண் உருவகப்படுத்துதல் மற்றும் ஏயுசுவுஆ செயல்முறை | SLIIT, பொறியியல் பீடம், 2024 ஜூலை 25 |
| டபிள்யு.எஸ்.ஏ. சுதர்ஷண, எல்.கே.ரீ. சிறிமால், ஆர். கல்லாகே | கூரை காப்புக்கு தென்னந்தும்பு -வலுவூட்டப்பட்ட இயற்கை ரப்பர் கலவைகளின் பயன்பாடு: ஒரு ஆய்வு | ஆராய்ச்சிப் பிரிவு, தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவை பல்கலைக்கழகம் 18 டிசம்பர் 2024 |
| டபிள்யு.ஆர்.ஆர். சமோதித, ஜே.சீ. ஜயவர்ண, ஏ.டீ. வீரகோன் | மீட்கப்பட்ட கார்பனை திண்ம டயர் சேர்மங்களில் இணைத்தல் | ISSN: 2773-7055 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் சபை அலுவல்கள், தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவை பல்கலைக்கழகம் 2024 டிசம்பர் 18 |
| டீ.ரீ.ஜே. ஜயவர்தன, ஏ.டீ. வீரகோன் எஸ்.ஜீ.ஜே. பெரேரா | நீடுறுதிமிக்க பொருட்களைப் பயன்படுத்தி இயற்கை ரப்பர் பற்றவைப்பில் தீயை எதிர்க்கும் நடத்தையை மேம்படுத்துதல். | ISSN: 2773-7055 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் சபை அலுவல்கள், தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவை பல்கலைக்கழகம் 2024 டிசம்பர் 18 |
| ஏ.டீ. வீரகோன் | இணையம் ஊடான கல்வி அமைப்பில் நன்றியுணர்பினை வளர்த்தல்: ஒரு டிஜிட்டல் நன்றியுணர்வு நிகழ்ச்சி. | ISSN: 2773-7055 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் சபை அலுவல்கள், தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவை பல்கலைக்கழகம் 2024 டிசம்பர் 18 |
| ஜே.கே. ஜயதுங்க, டீ.ஷியாமலீ, அமரசிங்க பீ. | திரவமாக்கப்பட்ட படுக்கை உலர்த்தியில் கருப்பு மிளகை உலர்த்துவதன் இயக்கவியல் மற்றும் கணித மாதிரியாக்கம். | நீடுறுதிமிக்க கட்டமைப்புச் சூழல் பற்றிய சர்வதேச மாநாடு 2024(ICSBE 2024) |
| ஜி.கே. ஜயதுங்க, எம். விக்ரமதிலக்க | எரிசக்தி முகாமைத்துவத்திற்கான சூரிய ஒளிமின்னழுத்த முறைமைகளை ஒருங்கிணைத்தல்: உயர் கல்வி நிறுவனத்தின் ஒரு விடய ஆய்வு. | மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு. (ITUM -IRC 2024) |
| எம்.டீ.ஏ.எஸ். மன்சநாயக்க, ஜீ.கே. ஜயதுங்க, பீ.எம்.டபிள்யு..பீ.கே. அமரசிங்க | இலங்கை செயல்படுத்தப்பட்ட கார்பனைப் பயன்படுத்தி கழிவுநீரில் இருந்து அமோக்ஸிசிலின் அகற்றுதல்: இயக்கவியல் ஆய்வு | மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு. (ITUM -IRC 2024 |
| எம்.டீ.ஏ.எஸ். மன்சநாயக்க, பீ.எம்.டபிள்யு..பீ.கே. அமரசிங்க, ஜீ.கே. ஜயதுங்க | இலங்கை செயல்படுத்தப்பட்ட கார்பனைப் பயன்படுத்தி கழிவுநீரிலிருந்து அமோக்ஸிசிலின் அகற்றுதல் | நீடுறுதிமிக்க கட்டமைப்புச் சூழல் பற்றிய சர்வதேச மாநாடு 2024 (ICSBE 2024) |
| எம். ராஜபக்ஷ, எம்.கே. பிரேமநாத், ஜி.கே. ஜயதுங்க, பீ. அமரசிங்க | ஒரு பொதி செய்யப்பட்ட படுக்கை உலர்த்தியில் மிளகாய் உலர்த்தும் போது வெப்ப பரிமாற்ற பகுப்பாய்வு | இரசாயனவியல் மற்றும் செயலாக்கப் பொறியியல் திணைக்கத்தின் 1வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு. (ChemEICon - 2024) |

## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| பதிப்பாசிரியர்கள் | ஆராய்ச்சி இதழின் தலைப்பு | மாநாடு/ ஆய்விதழ்/ நூல்கள் இணைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| எஸ்.ஜீ.ஜே. பெரேரா, எஸ்.எம். எகொடகே, எஸ்.வல்பலகே | அமிலம் இல்லாத துணை-உறைதல் நுட்பத்திலிருந்து தயாரிக்கப்பட்ட மெலிக் அன்ஹைட்ரைட்டிலிருந்தான தோன்றல் ஒட்டுண்ணி இயற்கை ரப்பர்-களிமண் நானோகாம்போசிட் வல்கனைசேட்டின் இயந்திர பண்புகளை செயல்படுத்துவதற்கான ஒரு முறை. | மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 3வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு. (ITUM -IRC 2024 |
| ரத்னசிங்க. என்.எல்., கௌஷானி. கே.ஜி., ராஜபக்ஷ. பி.எஸ்., டி சில்வா. ஏ., ஜெயசிங்க. ஆர்.ஏ., லியனகே. ஆர்.என். பிரியதர்ஷனா, ஜி. | பிரத்தியேக பராமரிப்பு தயாரிப்புகளில் நானோ பொருட்களின் தனித்துவமான அம்சங்கள் மற்றும் பங்கு குறித்த தற்போதைய போக்குகள். | கொஸ்மாடிக்இ , 11(5), 152. (2024) |
| ராஜபக்சே. பி.பி.எஸ்., ரத்னசிங்க. என்.எல்., ஜெயசிங்க. ஆர்.ஏ., நில்மினி. ஏ.எச்.எல்.ஆர்., கருணாரத்ன. வி., விஜேசேன. ஆர்.என்., பிரியதர்ஷனா. ஜி. | இரசாயனப் பொறியியல் முறையை மேம்படுத்துவதன் மூலம் வைக்கோல் செல்லுலோஸ் நானோ இழைகளைப் பிரித்தெடுத்தல், மெல்லிய படலங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் இயல்பினை ஆய்வு செய்தல். | நிலையான அபிவிருத்திக்கான சர்வதேச மாநாடு (பக். 315-330). சிங்கப்பூர்: இயற்கை வசந்தம் மிக்க சிங்கப்பூர் (2024, மார்ச்). |
| ரத்னசிங்க. என்.எல்., ராஜபக்ஷ. பி.பி.எஸ்., ஜெயசிங். ஆர்.ஏ., நில்மினி. ஏ.எச்.எல்.ஆர்., திசேரா. என்.டி., விஜேசேன. ஆர்.என்., பிரியதர்ஷனா. ஜி. | தோல் பயன்பாடுகளுக்கான கைடின் அடிப்படையிலான சூத்திரத்தின் பௌதீகப் பொறியியல் மற்றும் இரசாயனவியல் இயல்பினை ஆய்வு செய்தல். | நிலையான அபிவிருத்திக்கான சர்வதேச மாநாடு (பக். 137-154). சிங்கப்பூர்: இயற்கை வசந்தம் மிக்க சிங்கப்பூர் (2024, மார்ச்). |
| திசேரா. என்.டி., விஜேசேன. ஆர்.என்., லுடோவைக். என்., பிரியதர்ஷனா. ஜி., தஹாநாயக்க. டி., டி சில்வா. ஆர்.எம்., டி சில்வா. கே.என். | மெரினோ கம்பளி நூலிலிருந்து கெரட்டின் புரத நானோ இழைகள்: α-கெரட்டின் புரத நானோ இழைகளைப் பிரித்தெடுப்பதற்கான படிநிலை கம்பளி கட்டமைப்பின் சிதைவுக்கான மேலிருந்து கீழான அணுகுமுறை. | RSC முன்னேற்றங்கள், 14(10), 6793-6804. (2024) |
| ராஜபக்சே. பி.பி.எஸ்., ரத்னசிங்க. என்.எல்., ஜெயசிங்க. ஆர்.ஏ., நில்மினி. ஏ.எச்.எல்.ஆர்., கருணாரத்ன. வி., விஜேசேன. ஆர்.என்., பிரியதர்ஷனா. ஜி. | இரசாயனப் பொறியியல் முறையை மேம்படுத்துவதன் மூலம் வைக்கோல் செல்லுலோஸ் நானோ இழைகளைப் பிரித்தெடுத்தல், மெல்லிய படலங்களை உருவாக்குதல் மற்றும் இயல்பினை ஆய்வுசெய்தல். | நிலையான அபிவிருத்திக்கான சர்வதேச மாநாடு (பக். 315-330). சிங்கப்பூர்: இயற்கை வசந்தம் மிக்க சிங்கப்பூர் (2024, மார்ச்). |

## ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| பதிப்பாசிரியர்கள் | ஆராய்ச்சி இதழின் தலைப்பு | மாநாடு/ ஆய்விதழ்/ நூல்கள் இணைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| ரத்னசிங்க. என்.எல்., ராஜபக்ஷ. பி.பி.எஸ்., ஜெயசிங். ஆர்.ஏ., நில்மினி. ஏ.எச்.எல்.ஆர்., திசேரா. என்.டி., விஜேசேன. ஆர்.என்., பிரியதர்ஷனா. ஜி. | தோல் பயன்பாடுகளுக்கான கைடின் அடிப்படையிலான சூத்திரத்தின் பௌதீகப் பொறியியல் மற்றும் இரசாயனப் பண்புகளை ஆய்வு செய்தல். | நிலையான அபிவிருத்திக்கான சர்வதேச மாநாடு (பக். 137-154). சிங்கப்பூர் , இயற்கை வசந்தம் மிக்க சிங்கப்பூர் (2024, மார்ச்). |
| நதீகா டி திசேரா, ருசிர என் விஜேசேன, நடாலி லுடோவிக், கயான் பிரியதர்ஷன, தமயந்தி தஹநாயக்க, ரோஹினி எம் டி சில்வா, கே எம் நளின் டி சில்வா | மெரினோ கம்பளி நூலிலிருந்து கெரட்டின் புரத நானோ இழைகள்: α-கெரட்டின் புரத நானோ இழைகளைப் பிரித்தெடுப்பதற்கான படிநிலை கம்பளி கட்டமைப்பின் சிதைவுக்கான மேலிருந்து கீழான அணுகுமுறை. | ஆய்விதழ் சுளுஊ முன்னேற்றங்கள்இ 2024 |
| SLPSAS – 08 | ஏற்பாடுகள், எதிர்பாராப் பொறுப்புகள் மற்றும் எதிர்பாராச் சொத்துக்கள் |
| SLPSAS – 09 | முதலீட்டாளர்கள் |
| SLPSAS – 11 | செலாவணி அல்லாத பணப் பரிமாற்றத்திலிருந்தான அரசிறை |

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் மற்றும் அதனைச் சமர்ப்பிப்பதிலும் கீழே குறிப்பிடப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

## 03. நிதி நிலைமைகள் பற்றிய கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பின்வரும் விடயங்கள் நிதி நிலைமைகள் பற்றிய கூற்றுக்களின் கீழ் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### A.நடைமுறைச் சொத்துக்கள்

தற்போதுள்ள சொத்துக்கள் குறிப்பு 1, 2 மற்றும் 3 – அட்டவணைகள் அ, ஆ மற்றும் இ ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

அ. வங்கியிலுள்ள பணம் பற்றிய விடயங்கள் குறிப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது. இதில் 31.12.2024 ஆம் திகதியிலுள்ளவாறு, மீண்டெழும் பண இருப்பு மீதி (ரூ. 18.3 மில்லியன்) மற்றும் மூலதன பண இருப்பு மீதி (ரூ. 17.9 மில்லியன்) மற்றும் சேகரிப்புக் கணக்கு இருப்பு மீதி (ரூ. 16.7 மில்லியன்) மற்றும் மாணவர் நலன்புரி நிதிய பண இருப்பு மீதி (ரூ. 0.30 மில்லியன்) ஆகியவை அடங்குகின்றன. வங்கியில் உள்ள மொத்தப் பணம் ரூபா 9.3 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ஆ. பெறத்தக்கவைகள் தொடர்பில் குறிப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளதோடு, அவை அறிக்கையிடல் திகதியிலான நிலுவைத் தொகைகளின் மதிப்பாய்வின் அடிப்படையில் நியாயமான பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் பெறத்தக்கவைகள் ரூபா 2.7 மில்லியன் தொகையினால் அதிகரித்துள்ளன. 2024.12.31 இலுள்ளவாறு, பெறத்தக்கவைகளின் பெறுமதியானது ரூபா 20,708,308/= ஆகும். இவற்றில் கடன் மற்றும் முன்பணங்கள், முதலீட்டிலிருந்து பெறத்தக்க வட்டி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் மின்சார சபை ஆகியவற்றிலிருந்து பெறத்தக்க எரிபொருள் வைப்புத் தொகை மற்றும் பாதுகாப்பு வைப்புத்தொகைகள் மற்றும் பெறத்தக்க கடைத்தொகுதிகளின் வாடகை, பெறத்தக்க விடுதிக் கட்டணம் போன்றன உள்ளடங்குகின்றன.

2024 ஆம் ஆண்டுக் காலத்தின் பொழுது, சில கல்விசார் ஊழியர்கள் ரூபா 30,309,494.59 பெறுமதியுடைய முறி மற்றும் உடன்படிக்கையினை மீறியுள்ளதோடு, மற்றும் சில கல்விசார் ஊழியர்கள் ரூபா 67,185,931.49 பெறுமதியுடைய முறி மற்றும் உடன்படிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். 2024.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு முறி மற்றும் உடன்படிக்கைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 246,019,117.36 ஆகும்.

இ. கையிருப்பானது, பிரதான களஞ்சிய நிலையங்களிலுள்ள எழுதுகருவிகள், அச்சிடும் பொருட்கள் மற்றும் பராமரிப்பு பொருட்களும், மருத்துவ மையத்திலுள்ள மருந்துப் பொருட்களும் மற்றும் செயலமர்வுக் களஞ்சிய நிலையங்களில் இயந்திரப் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் உள்ள ஐந்து செயலமர்வுச் சாலைகளுக்குமான செயலமர்வுப் பொருட்களும் குறித்த காலப் பகுதியின் இறுதியிலுள்ளவாறு காணப்படுவதோடு, இவை குறைந்த செலவு மற்றும் நிகர கைகூடத்தகு பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, செலவானது முதலில் வருவது முதலில் வெளியேறுவதனை அடிப்படையாயக் கொண்ட கொள்முதல் விலையாகும்.

பிரதான களஞ்சிய நிலையம், மருத்துவ நிலையம் மற்றும் செயலமர்வுக் களஞ்சியசாலைகள் ஆகியவற்றில், நிறுவனத்தின் பணிப்பாளரினால் நியமிக்கப்படுகின்றதொரு குழுவால் களஞ்சியசாலைகளின் சரிபார்க்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, குழுவின் பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2024.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு, களஞ்சியாலை இருப்பிலுள்ளவற்றின் பெறுமதித் தொகை ரூபா 6,290,719.41 ஆகும்.

ITUM இன் கட்டுமானப் பணிகள் முடிந்ததும், சர்வதேச கட்டுமான கூட்டமைப்பு (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தால் விட்டுச் செல்லப்பட்டுள்ள மீதமான இருப்புக்களாக அடையாளம் காணப்பட்ட சில பொருட்கள் காணப்படுகின்றன. இந்த பொருட்களின் மதிப்பு ரூபா 4,222,740.00 ஆகுமென்பதோடு, இத்தொகையானது ITUM இன் களஞ்சிய இருப்புக்கள் தொடர்பான கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**(ஈ)** (முற்கொடுப்பனவில் கட்டடம், இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் மென்பொருள் போன்றன குறித்தான பராமரிப்புச் செலவுகள் அடங்குகின்றன (சேவை ஒப்பந்தம் மற்றும் காப்புறுதி). 2024 ஆம் ஆண்டின் இறுதியில் முற்கொடுப்பனவின் பெறுமதியானது ரூபா 1,868,241.61 ஆகும். இது ரூபா 1.7 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**(B) நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

நடைமுறையல்லாச் சொத்துக்கள், குறிப்பு 4, 5, 6, 7 மற்றும் 8 என வகைப்படுத்தப்படுகின்றன.

**அ. நீண்ட கால முதலீடுகள் : குறிப்பு - 4**

நீண்டகால முதலீடுகள் குறிப்பு 4 இன் கீழ் வகைப்படுத்தப்படுவதோடு, அவை ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் அவற்றின் நியாயமான பெறுமதியில் காட்டப்படுகின்றன.

சில முதலீடுகள் இவ் ஆண்டுக்கெனப் பெறப்பட்ட வட்டியுடன் அதிகரிக்கப்பட்டுள்ளன. முறிப்பத்திர மீறல் பணம் தொடர்பில் செய்யப்பட்ட புதிய முதலீடுகள் ரூபா 1,535,137.11, தொழில் வழிகாட்டல் கண்காட்சிக்காக பெறப்பட்ட நிதி ரூபா 1,000,000/-, வணிக கடற்படை அதிகாரிகளுக்கான பயிற்சி திட்டக் கணக்கு ரூபா 4,887,375.13 மற்றும் ITUM அபிவிருத்திக் கணக்கில் இருப்பு ரூபா 10,000,000ஃ- ஆகும். 31.12.2024 ஆம் திகதியிலுள்ளவாறு, முதலீட்டின் மொத்தப் பெறுமதி ரூபா 41,656,322.96 ஆகுமென்பதோடு, கடந்த நிதிக் காலத்துடன் ஒப்பிடும்போது இது 19.1 மில்லியன் அதிகரிப்புமாகும்.

**ஆ. ஆதரனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் - குறிப்பு 5, 6, 7, 8 (அட்டவணை ஈ, உ, ஊ)**

ஐவுருஆ ஆனது, 2007 ஆம் ஆண்டுக் காலத்தின் போது, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 25 மில்லியன் ஆன பகுதியளவுத் தொகையினைச் செலுத்தி அட்டவணை-உ இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியினைக் கொள்வனவு செய்தது. குறித்த காணியின் நியாயமான பெறுமதி, கணக்குகளில் காட்டப்பட்டுள்ளவாறு ரூபா 175,376,800 மில்லியன் ஆகும். முழு கட்டணத்தையும் செலுத்திய பின்னரே குறித்த காணியைக் கையகப்படுத்தும் செயல்முறை முடிவடையும். காணியின் முழுப் பெறுமதித் தொகையினையும் செலுத்தித் தீர்ப்பதற்காக மீதமாகச் செலுத்த வேண்டிய தொகையை ஐவுருஆ கோரிய போதிலும்;, அரச திறைசேரியானது அந்த நிதியை இன்னமும் ஒதுக்கவில்லை.

கணக்காய்வுத் தலைமை அதிபதியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், முதலீட்டு ஆதனம் (குறிப்பு 6) மற்றும் நூலகத்தின் புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் (குறிப்பு 7) ஆகியவற்றின் பெறுமதிகள் 31.12.2024 ஆம் திகதியிலுள்ளவாறு நிதி நிலை அறிக்கையில் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன. முதலீட்டு ஆதனங்கள் ITUM வளாகத்தின் கடைத்தொகுதிகள், பல் தொழிற்பாட்டு மண்டபம் மற்றும் பணியாளட்டொகுதியினர் தங்குமிடங்கள் ஆகியவற்றிலிருந்தானவற்றைக் கொண்டுள்ளது.

**அகற்றப்பட வேண்டிய பொருட்கள்**

இக் காலத்தின் போது ரூபா 2,200 பெறுமதியுடைய மேலங்கி ஒன்று அகற்றப்படுவதற்குரியதொரு பொருளாக இனங்காணப்பட்டது.

**தள்ளுபடிகள்**

இக் காலத்தின் போது எந்தவொரு தள்ளுபடித் தொகையும் அறிவிக்கப்படுவதற்கில்லை.

**சேர்த்தல்கள்**

2024 ஆம் ஆண்டுக் காலத்தின் பொழுது நிலையான சொத்துக்களைக் கையகப்படுத்திய செலவு கிட்டத்தட்ட ரூபா 18.5 மில்லியன் மாத்திரமே ஆகும். இக் காலப்பகுதியில், செலுத்தித் தீர்க்கப்பட்ட தொகை ரூபா 13.2 மில்லியன் ஆகும். பெற்றுக் கொள்ளப்பட்ட திறைசேரியின் அளிப்பிலிருந்து பொருள் வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள தொகையாக ரூபா 5.3 மில்லியன் காணப்படுகிறது.

**மீள்பெறுமதியிடல்கள்**

அறிக்கையிடல் காலப்பகுதியின் போது எந்தவொரு மீள் பெறுமதியிடல்களும் முன்னெடுக்கப்படவில்லை.

**தேய்மானம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் போன்றவை, 1995 ஒக்டோபர் 5 ஆம் திகதிய 649 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் பிரகாரம், அவற்றின் பயன்பாட்டு ஆயுட்காலத்தில் நேர்-வரிசை முறையைப் பயன்படுத்தி பின்வரும் விகிதங்களில் தேய்மானம் செய்யப்படுகின்றன. இந்த ஆதனங்கள் அவற்றின் வரலாற்று ரீதியான செலவில், திரட்டப்பட்ட தேய்மானத்தின் நிகரத்தில், இருப்பு மீதி தொடர்பில் அறிக்கை செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு | : 05% |
| அலுவலக ஆய்வகம் மற்றும் கற்பித்தல் சாதனங்கள் | : 20% |
| தளபாடங்கள் | : 10% |
| நூலக புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் | : 20% |
| தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் | : 20% |
| மேலங்கிகள் | : 20% |
| இயந்திரங்கள் | : 10% |
| மோட்டார் வாகனங்கள் | : 20% |
| விளையாட்டு உபகரணங்கள் | : 25% |
| மென்பொருட்கள் | : 20% |

2024 ஆம் ஆண்டுக் காலத்திற்கான மூலதனச் சொத்துக்கள் மீதான தேய்மானத்திற்காக ரூபா 492.8 மில்லியன் ஆன தொகை வழங்கப்பட்டுள்ளது.

**(C). பொறுப்புக்கள்**
நடைமுறைப் பொறுப்புக்கள் (குறிப்பு 9, 10, 11) – நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

செலுத்தப்பட வேண்டியவைகள் குறிப்பு-9 இன் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

இந்த ஆண்டுக் காலத்தில், செலுத்த வேண்டிய தொகையானது ரூபா 1.5 மில்லியனால் குறைக்கப்பட்டுள்ளது. 2024.12.31 இலுள்ளவாறு, செலுத்த வேண்டிய தொகையின் பெறுமதி ரூபா 19,198,812/- ஆகும்.

2002.09.22 ஆம் திகதி வெளியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதத்தின் பிரகாரம், கொடுப்பனவைப் பெறாத கல்விசார் ஊழியர்களுக்கு சமநிலைக் கொடுப்பனவாக கிட்டத்தட்ட ரூபா 4 மில்லியன் செலுத்த வேண்டியதொரு கடப்பாடு காணப்படுகிறது.

**(D). ஒத்திவைக்கப்பட்ட சேவை வருமானமானங்கள் குறிப்பு-10 இன் கீழ் வகைப்படுத்தப்படுகிறன**

ஒத்திவைக்கப்பட்ட சேவை வருமானமானது ரூபா 0.3 மில்லியன் தொகையினால் குறைவடைந்துள்ளது. அடுத்த ஆண்டுக் காலத்தில் செலவுசெய்யப்படவுள்ள குறுங்கால பாடநெறிகளினதும் மற்றும் ஆலோசனைச் சேவைகளினதும் மீதி வருமானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**(E). திரட்டப்பட்ட செலவுகள் குறிப்பு-11 இன் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன**
அறிக்கையிடும் காலத்தில் திரட்டப்பட்ட செலவுகள் ரூபா 18.2 மில்லியன் தொகையினால் குறைவடைந்துள்ளதோடு, இது ரூபா 31,091,254.30 ஆகும்.

**(F). நடைமுறையல்லா பொறுப்புக்கள்**

கடந்த கால நிகழ்வின் விளைவாக நிகழ்கால கடப்பாடுகள் காணப்படுகின்ற போது, நிச்சயமற்ற தொகை அல்லது காலம் குறித்தான எதிர்கால செலவினங்களுக்காக பணிக்கொடை பற்றிய ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகிறது. பணிக்கொடை செலுத்துவதற்கு செலவினத் தேவைப்பாடு எழும் என்பது சாத்தியமாகுமென்பதோடு, குறித்த கடப்பாட்டின் அளவு தொடர்பில் நம்பகமான மதிப்பீட்டைச் செய்ய முடியும்.

2024 ஆம் ஆண்டிற்கான திரட்டப்பட்ட பணிக்கொடை ஏற்பாடாக ரூபா 117,804,494.75 ஆன தொகை வழங்கப்பட்டுள்ளது. இது 2023 ஆம் ஆண்டை விட ரூபா 29.4 மில்லியன் அதிகரிக்கப்பட்டுள்ள தொகையாகும். இவ் ஆண்டுக் காலத்தில், ஓய்வு பெற்ற மற்றும் பதவியை ராஜினாமா செய்த கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான பணிக்கொடையாக ரூபா 9,175,461.50 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக் காலத்தில் சம்பள வாக்குகளுக்குரிய பணிக்கொடைக்கான ஏற்பாட்டினை தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், உடனடியாக செலுத்தப்படாத ரூபா 20,014.50 மதிப்புள்ள சில வைப்புத்தொகைகளும் உள்ளன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு வைப்பானது நடைமுறையல்லா பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**(G). செலவிடப்பட்ட மூலதன அளிப்பு தொடர்பில் குறிப்பு-12 a மற்றும் 12 b ஆகியவற்றில் வழங்கப்படுகிறது**

**(H). செலவிடப்படாத மூலதன அளிப்பு – குறிப்பு-13**

**(I). பொது ஒதுக்கம் - குறிப்பு-14**

**(J). தற்போதைய பற்றாக்குறை – குறிப்பு-15**

**(K). மூலதனப் பற்றாக்குறை குறிப்பு-16**

**(L). அன்பளிப்பு – குறிப்பு-17 மற்றும் கண்காணிப்பின்றிய அரசாங்க மானியம் – குறிப்பு-18**

அன்பளிப்பு மற்றும் கண்காணிப்பின்றிய அரசாங்க மானியக் கணக்குகளின் இருப்பு மீதியானது 2023 ஆம் ஆண்டுக்கான நிதி சார் செயலாற்றுகைக் கூற்றின் மூலம் சீர் செய்யப்பட்டுள்ளது.

**(M). திரட்டப்பட்ட வாக்குகள் - குறிப்பு-15**

இவ் ஆண்டுக் காலத்தின் போது, சில பிரதேச அபிவிருத்திக் கணக்குகள், ITUM அபிவிருத்திக் கணக்கு, பணிப்பாளர்கள் கணக்கு, ஆய்வகம் மற்றும் நூலக வைப்புக்கள் ஆகியவற்றிலான அதிகரிப்பு காரணமாக திரட்டப்பட்ட வாக்குகள் ரூபா 2.9 மில்லியன் தொகையினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2024.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு, இது ரூபா 98,049,124/= ஆகும். மேலும் இத்தொகைகள் அட்டவணைகளின் கீழ் வகைப்படுத்தப்படுகிறது.

2018 ஆம் ஆண்டிலிருந்து ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்கான அரசாங்கத்தின் அளிப்புகள் போதுமானதாக இல்லாததனால், மேற்படி திரட்டப்பட்ட கணக்குகளின் பணத்தொகையானது மீண்டெழும் செலவினங்களைத் தீர்ப்பதற்கு பயன்படுத்த வேண்டியிருந்ததோடு, அத்தகைய நிதிகளின் முதலீட்டிலிருந்தான வட்டி வருமானம் காலாவதியாகியுள்ளது. இருப்பினும், மேற்படி அறிக்கையிடும் காலப் பகுதியில் இந்த நிலுவைகளிலிருந்து ரூபா 15 மில்லியன் தொகையினை முதலீடு செய்வதற்கு நிறுவனத்தினால் இயலுமாக இருந்தது.

**04. நிதிசார் செயலாற்றுகை பற்றிய கூற்றுக்கான குறிப்புகள்**

2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான இயக்கப்பாட்டு வருமானம் மற்றும் இயக்கப்பாட்டுச் செலவினங்கள் ஆகியன வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வருமானமானது SLPSAS இன் கீழ் திரட்டல் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட செலவினங்களுக்கான வருமானத்தினை ஒப்பிடுவது அவசியமில்லை. வருமானம் மற்றும் தொடர்புடைய செலவுகளிலிருந்து எழும் காசுப் பாய்ச்சல்கள் இக் காலப் பகுதியின் பொழுது இடம்பெற்றன.

**அ. இயக்கப்பாட்டு வருமானம்**

அரசாங்கத் திறைசேரியிலிருந்து நிறுவனத்திற்கு ரூ. 605,030,500/= ஆன தொகை பெறப்பட்டுள்ளதோடு, பிற வருமானங்கள் பரிவர்த்தனை மற்றும் பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளில் இருந்து வகைப்படுத்தப்பட்டுள்ளன. பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்தான மொத்த வருமானம் ரூபா 649,581,499/= ஆகுமென்பதோடு, பரிவர்த்தனையுடனான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான மொத்த வருமானம் ரூபா 54,995,126/= ஆகும். அத்துடன் இவை இரண்டும் குறித்த அறிக்கையிடும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. திறைசேரியின் அளிப்பு ரூபா 47.4 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தாலும், அது ஆண்டின் அனைத்து செலவுகளையும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. அறிக்கையிடல் காலத்தில் மட்டுமே பிற வருமானம் 0.3 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**ஆ. இயக்கப்பாட்டுச் செலவினம்**

திரட்டுக் கணக்கின் கீழ், செலவினங்கள் என்பது, நிகர சொத்துக்கள் பங்குகளில் குறைவை ஏற்படுத்தும் வகையிலான சொத்துக்களின் வெளிப்பாய்ச்சல் அல்லது நுகர்வு அல்லது பொறுப்புகளின் நிறைவேற்றம்; ஆகிய வடிவங்களில், குறித்த அறிக்கையிடல் காலத்தின் போது பொருளாதார அனுகூலங்கள் அல்லது சேவை திறனில் ஏற்படும் அதிகரிப்பு ஆகும். செலவுக்குக் காரணமான பரிவர்த்தனை இடம்பெறும் பொழுது செலவுகள் அங்கீகரிக்கப்படுகிறது. இதனால், காசு அல்லது காசுக்குச் சமனானவை பெறப்படும்போது அல்லது அவை செலுத்தப்படும்போது செலவுக்கான அங்கீகாரம் சம்பந்தப்படுவதில்லை.

ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கான ஒப்படைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் குறுங்கால பாடநெறிகள் போன்றன வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, குறித்த மானியங்களில் இருந்தான செலவுகள் குறித்த காலப் பகுதியிலான செலவுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

குறித்த காலப்பகுதிக்கான நடப்பு பற்றாக்குறை ரூபா 5,238,754/= ஆகுமென்பதோடு, இது 2023 ஆம் ஆண்டை விட ரூ. 0.2 மில்லியன் தொகையினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மூலதனப் பற்றாக்குறையானது ரூபா 470,247,503/= ஆகுமென்பதோடு, இது 2023 ஆம் ஆண்டை விட ரூ. 31.7 மில்லியன் குறைவாகக் காணப்படுகிறது.

**05. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்றுக்கான குறிப்புகள்**

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ளுடுPளுயுளு-02 இற்கு இணங்க, இயக்கப்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் ஆகியவற்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் (உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய) நேரடியல்லா முறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்றில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

திருமதி எஸ்.பீ.டீ. பீரிஸ்
பதில் சிரே~;ட உதவி நிதியாளர்

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கைக

**1. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது, கணக்காய்வுத் தலைமை அதிபதியின் ஒப்புதலுடன், கணக்காய்வுக் குழுவும் முகாமைத்துவச் சபையும் அங்கீகரித்தவாறான, அதன் 2024 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்காய்வுத் தொழிற்பாட்டினை மேற்கொள்கின்றது.

தொழில்நுட்ப நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் மேற்பார்வை மற்றும் பிரதி உள்ளகக் கணக்காய்வாளரின் வழிகாட்டுதல் ஆகியவற்றின் கீழ், நிறுவகத்தினால் ஒதுக்கப்பட்ட கணக்காய்வு உதவியாளரினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாட்டொகுதி உறுப்பினர்களும் நிறுவகத்தின் கணக்காய்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தமது உதவியை வழங்கி வருகின்றனர்.

**2. கணக்காய்வுக் குழு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது, 2023.09.19 ஆம் திகதிய, 08/2023 ஆம் இலக்க ருபுஊ நிதிச் சுற்றறிக்கைக் கடிதத்தின் மூலம், “அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான செயற்பாட்டுக் கையேடு மற்றும் கூட்டுறவு ஆளுகை பற்றிய வழிகாட்டல்” குறித்தான 2021.11.16 ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சியாண்மைகள் சுற்றுநிருபத்தையும் மற்றும் “குறைநிரப்பி-1 – அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான இயக்கப்பாட்டுக் கையேடு” குறித்தான 2023.05.16 ஆம் திகதிய, PED -01/2021(i) ஆம் இலக்க அரச தொழில்முயற்சியாண்மைகள் சுற்றுநிருபத்தையும் பொருந்திக்கொண்டு, அதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது “அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான கூட்டுறவு ஆளுகை பற்றிய வழிகாட்டல்” மற்றும் “செயற்பாட்டுக் கையேடு” ஆகியவற்றை 2023.09.19 ஆம் திகதி முதற்கொண்டு நடைமுறைக்கு வரும் வகையில் பல்கலைக்கழக முறைமையில் அறிமுகம் செய்துள்ளது.

நான்காம் அத்தியாயத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான கூட்டுறவு ஆளுகை பற்றிய வழிகாட்டல்கள் கணக்காய்வுக் குழுவிற்குப் பொருத்தமான ஏற்பாடுகளை விபரமாக வழங்குகின்றது. இதற்கு இணங்கவே, மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்காய்வுக் குழு செயற்பட்டு வருகிறது.

2.1 கணக்காய்வுக் குழுவின் பணி எல்லை

கூட்டுறவு ஆழுகைக்கான வழிகாட்டல்களில் வழங்கப்பட்டுள்ள மாதிரிச் சாசனத்திற்கு அமைவானதொரு கணக்காய்வுக் குழுச் சாசனம் விருத்தி செய்யப்பட்டதோடு, இது கணக்காய்வுக் குழுவின் பணி எல்லைகளை வரையறை செய்து வழங்குகின்றது. குறித்த கணக்காய்வுக் குழுச் சாசனம் கீழே வழங்கப்படுகிறது.

**கணக்காய்வுக் குழுச் சாசனம்**
**மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம**

1. அறிமுகம்

மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்காய்வுக் குழுவானது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் மூலம் முன்வைக்கப்படுகின்ற சட்டவாக்கத் தேவைப்பாடுகளுக்கு இசைவாக தாபிக்கப்பட்டதாகும். மேற்படி சட்டத்தின் குறித்த பிரிவில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது: "இரண்டாம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தினதும் ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்திற்குமென தொழிற்பாடுகளின் தொடர்ச்சியான பரிசீலனையைப் பொறுப்பேற்பதன்மூலம் விடயத்துக்கேற்ப, அப் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது அவ் ஆளும் குழுவிற்கு உதவுவதற்கு அவரினால் நியமிக்கப்பட்டதும், கணககாய்வுக் குழு என்னும் பெயரினால் அல்லது வேறேதேனும் பெயரினால் குறிப்பீடு செய்யப்பட்டதுமான கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவொன்றிருத்தல் வேண்டும்; அத்துடன் அக்குழு, சொல்லப்பட்ட பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது அவ் ஆளும் குழுவுக்கு காலத்துக்குக்காலம் அறிக்கையிடுதலும் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, மேற்படி சட்டத்தின் பிரிவு 41(2) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள நிறுவன வகைகள் பல்வேறு கணக்காய்வுக்குட்படு நிறுவன வடிவங்கள் தொடர்பில் சம்பந்தப்படுகின்றன. இந்த அடிப்படையிலேயே மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகமும் பிரிவு 41(2)(இ) வின் கீழ், அதாவது அது ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் என்பதன் கீழ் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது தேசிய கணக்காய்வுச் சட்டத்தினால் வேண்டப்படுகின்றதன் பிரகாரம் தாபிக்கப்படுவதோடு, அது மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்திலுள்ள கணக்காய்வுக் குழு என குறிப்பீடு செய்யப்படுகிறது.

கணக்காய்வுக் குழுவும் "அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான செயற்பாட்டுக் கையேடு மற்றும் கூட்டுறவு ஆளுகை பற்றிய வழிகாட்டல்கள்" என்பதை அறிமுகம் செய்கின்ற, 2023.09.19 ஆம் திகதிய, 08ஃ2023 ஆம் இலக்க ருபுஉஉ நிதிச் சுற்றுநிருபக் கடிதத்திற்கு இணங்குவதற்கான ஒரு வழிமுறையாகவே தாபிக்கப்பட்டதாகும்.

கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் (AC) மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையினால் (BOM), மூன்று வருட காலமொன்றுக்கு அல்லது BOM இன் பதவிக்காலம் முடிவடையும் வரை, இதில் எது முன்னர் இடம்பெறுகின்றதோ அது ஏற்புடையதாகுவதன் அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர்.

2. நோக்கம்

மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்காய்வுக் குழுவானது முகாமைத்துவச் சபைக்கு, பின்வரும் விடயங்களிலான அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் உதவும் வகையில் தாபிக்கப்படுகிறது:

அ) கிடைக்கத்தகு வளங்களுக்கு முன்னுரிமையளித்து, மொத்தமான அல்லது ஏதேனும் குறிப்பான கருத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில், குறித்த நிறுவனத்தின் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் நோக்கில், அதன் வளங்கள் செலவுச் சிக்கனமும் வினைத்திறன் மிக்க முறையிலும் உபயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் கணக்காய்வுக்குட்படுகின்ற அந்நிறுவனத்தின் கணக்காய்வு சார்ந்த மற்றும் முகாமைத்துவம் சார்ந்த அனைத்து விடயங்களையும் மீளாய்வு செய்தல்.

ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் ஆகியவற்றினால் இனங்காணப்பட்ட விடயங்கள் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டு அவை தொடர்பில் உரிய அவதானம் செலுத்தப்படுவதை உறுதிசெயகின்ற அதேவேளை, முகாமைத்துவச் சபையின் அவதானத்திற்கான மற்றும் அல்லது தீர்மானத்திற்கான பிரதான விடயங்களை அதன் முன் கொண்டுவரல்.

**3. கணக்காய்வுக் குழு**

3.1 கணக்காய்வுக் குழுவானது(AC) முகாமைத்துவச் சபையின் 3 நிறைவேற்றுத் தரம் அற்ற பணிப்பாளர்களை அல்லது நிறைவேற்றுத் தரம் அற்ற பணிப்பாளர்களில் 1/3 பங்கினரை, இவற்றில் உயர்வாகவுள்ள எண்ணிக்கையின் அடிப்படையில் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவர்களில் குறைந்தது ஒரு உறுப்பினராவது நிதி முகாமைத்துவத்தில் அறிவும் தகைமையும் கொண்டவராகவும், அத்தகைய உறுப்பினர் கணக்காய்வுக் குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுதலும் வேண்டும். முகாமைத்துவச் சபையானது திறைசேரிப் பிரதிநிதி ஒருவரைக் கொண்டிருக்குமாயின், அத்தகைய உறுப்பினர் கணக்காய்வுக் குழுவிற்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

3.2 கணக்காய்வுக் குழுவின் கூட்ட நடப்பெண், உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையாக இருத்தல் வேண்டும்.

3.3 ITUM இற்கான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, பல்கலைக்கழகத்தின் பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் உதவி உள்ளகக் கணக்காய்வாளர், குழுவினைக் கூட்டுவதற்குப் பொறுப்பாக இருப்பதோடு அதன் கூட்ட அறிக்கைகளையும் பேணுதல் வேண்டும். தொழில்நுட்ப நிறுவகத்திற்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதும், குறித்த பணிகள் ITUM இன் உள்ளகக் கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.4 தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதி ஒருவர் (மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கென ஒதுக்கப்படுகின்ற கணக்காய்வு அத்தியட்சகர்) மற்றும் வரிசை அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் அவதானிப்பாளர்களாகச் செயற்பட முடியும்.

3.5 கணக்காய்வுக் குழுவானது, ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் அவசியப்படுமிடத்து, அதன் அலுவல் நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கென நிறுவனத்தின் யாரேனும் அலுவலரை, அதன் தற்றுணிபின் பேரில் அழைக்கலாம்.

3.6 அவசியமானவிடத்து, முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன், கணக்காய்வுக் குழுச் சாசனத்தில் திருத்தம் எதனையும் மேற்கொள்ளலாம்.

**4. கூட்டங்கள்**

குழுவானது குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்பதோடு, அவசிமானவிடத்து மேலதிக கூட்டங்களைக் கூட்டுவதற்கான அங்கீகாரத்தையும் கொண்டுள்ளது.

**5. கணக்காய்வுக் குழுவின் பணியெல்லை**

5.1 உள்ளகக் கணக்காய்வு

5.1.1 வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டம் ஆகியவற்றுக்கு ஒப்புதல் வழங்கல் மற்றும் அவற்றுக்கான ஏதேனும் பாரிய மாற்றங்களுக்கும் ஒப்புதல் வழங்கல்.

5.1.2 உள்ளக் கணக்காய்வின் பணியெல்லையில் நியாயமற்ற கட்டுப்பாடுகள் அல்லது மட்டுப்பாடுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தல்.

5.1.3 உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணி நிறைவேற்றப்பட்டமை பற்றிய அறிக்கைக்கு ஒப்புதலளித்தல்.

5.1.4 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் அறிக்கை செய்யப்பட்டவாறான நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பயனுறுதித் தன்மையினை, சம்பந்தப்பட்ட பிரிவின் பதிலளிப்புக்களுடன் கலந்தாராய்தல்.

5.1.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது தமது கடமைகளை மேற்கொள்வதற்குப் போதுமான வசதிகளைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல்.

5.2 நிதி சார்ந்த அறிக்கையிடல்

5.2.1 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் மற்றும் கணக்காய்வு அத்தியட்சகரினாலும் சுட்டிக்காட்டப்படுகின்ற கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் சம்பந்தமான பிரச்சினைகளை மீளாய்வு செய்தல்.

5.2.2 ஏதேனும் தள்ளுபடி செய்வதற்கான பிரேரணைகளை மீளாய்வு செய்தல்.

5.2.3 கணக்காய்வுக் குழுவுடன் தொடர்பாடல் செய்யப்பட வேண்டிய அனைத்து விடயங்களும் உரியவாறு தொடர்பாடல் செய்யப்பட்டிருப்பதனை முகாமைத்துவம் மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்கள் ஆகியோர் மூலம் உறுதிசெய்தல்.

5.2.4 முகாமைத்துவத்தினால், உள்ளகக் கணக்காய்வினால் அல்லது கணக்காய்வு அத்தியட்சகரினால் தயாரிக்கப்படுகின்ற அறிக்கைகளை, நிதி சார் அறிக்கையிடல் தொடர்பிலான குறிப்பிடத்தக்க பிரச்சினைகள், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் தொடர்பான முக்கிய கணக்காய்வு விடயங்கள், ஏதுமிருப்பின், ஆகியவற்றுடன் சுட்டிக்காட்டி மீளாய்வு செய்தல.

5.3 இடர் முகாமைத்துவம்

கணக்காய்வுக் குழுவானது, மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் இடர் பதிவேட்டினை விருத்தி செய்து அதனைப் பராமரிப்பதற்கென நியமிக்கப்பட்ட உள்ளகக் குழுவினால் வழங்கப்பட்ட இற்றைப்படுத்தல்களின் அடிப்படையிலான இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் தொடர்பில் கலந்தாராய்வு செய்து, அவசியமானவிடத்து, அவ்விடயங்களை முகாமைத்துவச் சபைக்கு அறிக்கையிடல் வேண்டும். மேலும், கணக்காய்வுக் குழுவானது பிணைப்பத்திர மீறல் மீதான நிலுவைத் தொகையினைச் செலுத்துவதிலுள்ள நிதிசார் இடர்களின் அளவை மதிப்பீடு செய்வதில், பிணைப்பத்திர மீட்பு மீளாய்வுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற கூட்ட அறிக்கைகளையும் பரிசீலனை செய்கின்றது.

5.4 வெளியக கணக்காய்வாளர்களுடனான தொடர்புகள்

5.4.1 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வுப் பெறுபேறுகளை, கணக்காய்வுத் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட அக்கறைமிக்க விடயங்கள் மற்றும் அத்தகைய விடயங்களுக்கான பல்கலைக்கழகத்தின் பதில்கள் ஆகியவற்றுடன் கலந்தாராய்தல்.

5.4.2 குறிப்பிடத்தக்க கண்டறிதல்கள் பற்றிய கண்காய்வுத் தலைமை அதிபதியின் வினாக்கள் அறிக்கைகளை, முகாமைத்துவத்தின் பதிலளிப்புக்களுடன் கலந்தாராய்தல்.

5.5 இணக்கப்பாடு

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளும் அவற்றுக்கான திருத்தங்களும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவை, ஏற்புடையவிடத்து அரசாங்க தாபனக் கோவை, நிதிப் பிரமானங்கள், அரச திறைசேரிச் சுற்றுநிரூபங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற ஏனைய சுற்றுநிரூப வழிகாட்டல்கள், மற்றும் குறித்ததொரு நிதி ஆண்டுக் காலத்தின் போதான கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் தீர்க்கப்படுகின்ற விடயங்களின் பிரகாரத்திலான உள்ளகக் கொள்கைகள் பணிப்புரைகள் ஆகியவற்றுடனான பல்கலைக்கழகத் தொழிற்பாடுகளின் இணக்கப்பாடு குறித்தான நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதோடு, அதன் மூலம் ஒரு பலமான ஆளுகை வேலைச்சட்டகத்தினைத் தாபித்தல்.

5.6 அறிக்கையிடல் பற்றிய பொறுப்புகள்

5.6.1 உரிய சரிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில், கணக்காய்வுக் குழுவானது, அவசியமான வேளையில் அதன் பரிந்துரைகளை முகாமைத்துவச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, ஒரு கூட்டம் நிறைவடைந்த பின்னர் அதன் கூட்ட அறிக்கையினையும் விரைவாகச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

5.6.2 உள்ளகக் கணக்காய்வு, வெளியகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபை ஆகியவற்றுக்கு இடையில் ஒரு திறந்த தொடர்பாடல் பொறிமுறையினை வழங்கல்.

5.6.3 நிறுவனத்தின் பங்கீடுபாட்டாளர்களுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கும் வகையில் கணக்காய்வுக் குழு அறிக்கையினைச் சமர்ப்பித்தல்.

5.7 ஏனைய பொறுப்புக்கள்

5.7.1 அரச தொழில்முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) கூட்ட அறிக்கைகள் அறிக்கைகள் கண்டறிதல்கள் போன்றன தொடர்பில் கலந்தாராய்வதோடு, அவசியமானவிடத்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நிறுவனத்தைப் பணித்தல்.

6. கட்டணம் செலுத்தல்

கணக்காய்வுக் குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் அவதானிப்பாளர்களுக்கும் செலுத்தக் கூடிய கட்டணமானது, முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ஏற்புடைய கூட்ட அமர்வுக் கொடுப்பனவை விட மேலாகவிருத்தல் கூடாது. (அதாவது, சபையின் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களுக்கான ஏற்புடைய கூட்ட அமர்வுக் கொடுப்பனவானது தற்போதைய PED சுற்றுநிரூபத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் வழங்கப்படுகிறது.)

2.2 2024 இல் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கான அதன் உறுப்பினர்களின் பங்களிப்பு பற்றிய விபரங்கள்:

| பெயர் | 61 வது கூட்டம் | 62 வது கூட்டம் | 63 வது கூட்டம் | 64 வது கூட்டம் |
|---|---|---|---|---|
| பேராசிரியர் கே.ரீ.எம்.யு. ஹேமபால * | ✓ | ✓ | - | - |
| பேராசிரியர் (திருமதி) வை.ஜீ. சந்தநாயக்க (உறுப்பினர்) | ✓ | ✓ | ✓ | ✓ |
| பேராசிரியர் யூ.பீ. நவகமுவ ** | ✓ | ✓ | ✓ | ✓ |
| பேராசிரியர் ஜே. மானத்துங்க | - | - | - | ✓ |

*61வது மற்றும் 62வது கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் தவிசாளர்.

**61வது மற்றும் 62வது கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் உறுப்பினர் மற்றும் 63வது மற்றும் 64வது கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் தவிசாளர்.

## 2.3 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுவின் அவதானிப்பாளர்கள்

கூட்டுறவு ஆளுகைக்கான வழிகாட்டல்களின் கீழ் 08/ 2023 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதிச் சுற்றுநிரூபமானது, தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஒரு பிரதிநிதி மற்றும் வரிசை அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் அவதானிப்பாளர்களாகச் சேவையாற்ற முடியுமெனக் குறிப்பிடுகின்றது. அந்த வகையில், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகரை அழைத்துள்ளதோடு, கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் பங்களிக்குமாறு வரிசை அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும் அவதானிப்பாளராக அழைக்கப்பட்டார்.

## 2.4 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுவின் ஏனைய பங்கேற்பாளர்கள்

குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அவதானிப்பாளர்கள் தவிர, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட உதவி நிதியாளர் மற்றும் பிரதிப் பதிவாளர் ஆகியோரும், அழைப்பின் பேரில் குழுக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர். இக் கூட்டங்களில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதி உள்ளகக் கணக்காய்வாளரும் கலந்துகொள்வதோடு, இதற்கான கூட்ட ஏற்பாடுகளை மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உதவி உள்ளகக் கணக்காய்வாளர் ஏற்பாடு செய்கின்றார்.

## 2.5 2023 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுவின் பிரதான வழிகாட்டுதல்கள்

- ஒரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மூலம் வழிநடாத்தப்பட்டதோடு, கணக்காய்வுக் குழுவானது கூட்டங்களின் போது அறிமுகம் செய்யப்பட்டதொரு புதிய பணிச்சுபை அறிக்கையிடல் படிவத்தினைப் பின்பற்றி, ITUM இலுள்ள அதேமாதிரியான அமுலாக்கத்திற்கு வழியமைக்கின்ற கொள்கைக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதில் முன்முயற்சி எடுத்தது.

## 3. 2024 ஆம் ஆண்டுக் காலத்தின் போது இடம்பெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் பற்றிய விபரங்கள்

குழுவானது குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டுமென்றும், அதன் பின்னர், குறித்த சரிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவாக அமையும் வகையில், குழுவானது அதன் பிரிந்துரைகளை கூட்டத்தின் கூட்ட அறிக்கையோடு பணிப்பாளர்கள் சபைக்கு முடியுமான வரை விரைவாக அறிக்கை செய்தல் வேண்டுமென்றும் கூட்டுறவு ஆளுகை பற்றிய வழிகாட்டுதல்கள் வேண்டுகின்றன. இதற்கிணங்க, மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்காய்வுக் குழுவானது குறித்த மீளாய்வு ஆண்டுக் காலத்தின் பொழுது நான்கு சந்தர்ப்பங்களில் கூடியுள்ளது.

| கூட்ட இல. | கூட்டம் இடம்பெற்ற திகதி |
|---|---|
| 61வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 2024 மார்ச் 1 ஆம் திகதி |
| 62வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 2024 செப்டம்பர் 4 ஆம் திகதி |
| 63வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 2024 நவம்பர் 8 ஆம் திகதி |
| 64வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 2024 டிசம்பர் 6 ஆம் திகதி |

**4. 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தையும் மற்றும் செயற்திட்டத்தையும் அமுல்படுத்தல்**

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது ஒவ்வொரு ஆண்டுக்குமான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தினையும் செயற்திட்டத்தினையும் தயாரித்து வருகின்ற அதேவேளை, கணக்காய்வு அத்தியட்சகரின் கருத்துக்களையும் பரிசீலிக்கின்றதோடு, குறித்த திட்டத்தினை கணக்காய்வுக் குழுவிற்கு, அதன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றது. கணக்காய்வுக் குழுவானது குறித்த திட்டத்தினை விரிவாக மீளாய்வு செய்வதோடு, அவசியமானவிடத்து அதற்கான மாற்றங்கள் தொடர்பிலும் தனது ஆலோசனைகளை முன்வைக்கின்றது. 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமும் செயற்திட்டமும், 2023 நவம்பர் 24 ஆம் திகதி இடம்பெற்ற 60வது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 259வது முகாமைத்துச் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று வீதம் 100 சதவீதம் ஆகும்.

**4.1 2024 இல் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பாகங்கள்**

4.1.1 முன்-கணக்காய்வுகள்
- பல்கலைக்கழக சேமலாப நிதியை (UPF) விடுவித்தல்
- பணிக்கொடை செலுத்தல்
- ஓய்வூதிய நிதியை விடுவித்தல்
- பிணைத்தொகையை கணிப்பீடு செய்தல்

4.1.2 கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொடுக்கப்பட்ட கணக்காய்வு வினாக்கள்
- சுய-நிதியிடல் செயற்பாடுகள் பற்றிய கணக்காய்வு
- நிலையான சொத்துக்களின் பராமரிப்பு
- தீ விபத்து பற்றிய பாதுகாப்பு
- முற்கொடுப்பனவுகளும் அவற்றைத் தீர்த்தலும்
- பிணை உத்தரவாதங்கள், செயலாற்றுகை மிக்க முறிகள்
- IT மற்றும் IS பற்றிய கணக்காய்வு
- மீண்டெழும் செலவனம்
- ஷிராப்டரிடமுள்ள பணம் மற்றும் சில்லறைப் பணம் பற்றிய சரிபார்ப்புகள்
- வங்கி இணக்கக் கூற்று மற்றும் பணப் புத்தகம்

**5. வெளியக கணக்காய்வு**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 107(1) இன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு, அனைத்து உயர் கல்வி நிறுவனங்களினது கணக்குகளும் கணக்காய்வுத் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், குறித்த நிதி ஆண்டு முடிவடைந்ததன் பின்னரான ஆறு நாட்களுக்குள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குக் கையளிக்கப்படல் வேண்டும்.

2024 டிசம்பர் 06 ஆம் திகதி

| | | | |
|---|---|---|---|
| பேராசிரியர் யூ.பீ. நவகமுக<br>தவிசாளர்<br>கணக்காய்வுக் குழு | பேராசிரியர் கே.ரீ.எம்.யூ. ஹேமபால<br>உறுப்பினர்<br>கணக்காய்வுக் குழு | பேராசிரியர் வை.ஜீ சந்தநாயக்க<br>உறுப்பினர்<br>கணக்காய்வுக் குழு | பேராசிரியர் ஜே. மானத்துங்க<br>உறுப்பினர்<br>கணக்காய்வுக் குழு |

# தலைமை கணக்காய்வாளர் அறிக்கை

எனது இல: HED/C/ITM/24/FA திகதி : 2025 ஜூன் 25

பணிப்பாளர்
தொழினுட்பவியல் நிறுவனம் – மொறட்டுவைப் கல்கலைக்கழகம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழினுட்பவியல் நிறுவகத்தின் 2024 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட அத்துடன் ஒழுங்குப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழினுட்பவியல் நிறுவகத்தின் 2024 ஆண்டு டிசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறான் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி செயலாற்றுகைக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று அத்துடன் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகளை உள்ளடக்கிய 2024 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5)ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1)ஆம் உறுப்புரை மற்றும் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையின்படி எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.
மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழினுட்பவியல் நிறுவகத்தின் நிதிக் கூற்றுகளினால் 2024 டிசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை அத்துடன் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAVSs) இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிறுவகத்தின் 2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்.**

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவகத்தின் 2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, ஆனால் நிதிக்கூற்றுக்களுடன் அது சம்பந்தமாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாகக் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அது தொடர்பில் எவ்வித உறுதிப்படுத்தல் அல்லது அபிப்பிராயத்தை நான் வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுக்கு ஏற்புடையதாக, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களைக் பெற்றுக்கொள்ள முடிந்தபோது, ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு விதத்தில் பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருந்தவில்லையா என்பதைக் கருத்தில் கொள்ளுதல் எனது பொறுப்பாகும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மற்றும் எனது பணிகளின் அடிப்படையில், ஏனையத் தகவல்களில் பொருண்மையான தவறுகள் இருப்பதாக நான் முடிவு செய்தால் அதைத் திருத்துவதற்காக ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களுக்கு அவ்விடயம் வெளிப்படுத்தப்படும். இவ்விடயத்தில் அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை.

**1.4 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் நிர்வாகத்தினதும் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடின், செயற்பாடுகளை இடைநிறுத்த நடைவடிக்கை எடுத்தாலன்றி தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினைப் பலப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது..

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவுக்கமைய நிறுவகத்தின் ருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்களைத்தயாரிக்கக்கூடியவாறு அதன் வருமானங்கள், செலவினங்கள், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான புத்தகங்களையும் பதிவேடுகளையும் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில்பொருண்மையான பிறழ் கூற்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு உபயோகப்படுத்துவோரால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புகளை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன், என்னால் செய்யப்பட்டன மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறர் கூற்றுக்கள் மீதான ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்து கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுகளால் ஏற்படும் தாக்கத்தை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவறவிடுதல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்கள் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி, நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருப் பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு இணங்க தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பிலும், குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டுக்கு காரணமாக உள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறதா என முடிவுக்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுகளிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லையெனின் என்னுடைய அபிப்பிராயம் மறுக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு முடிவுக்கு வரலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்ட ரிதீயான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(a) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, கணக்காய்வுக்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான என்னுடைய பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு நிறுவனம் முறையான நிதி அறிக்கைகளைப்பேணி வந்துள்ளது.

2.1.2 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் நேரொத்துக் காணப்படுகின்றன.

2.1.3 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க கடந்த ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்டுள்ள சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளுக்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களைத் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு வேறு எதுவும் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(d) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க, நிறுவகத்தின்ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு நிறுவகத்துடன் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

2.2.2 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க, பின்வருவனவற்றைத் தவிர்த்து ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் அல்லது நிறுவகத்தின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற விதத்தில் செயற்பட்டுள்ளது என.

| | **சட்டங்கள், விதிகள் / கட்டளையுடனான தொடர்பு** | **தொடர்பு இணக்கமின்மை** |
|---|---|---|
| (அ) | தாபன விதிகள் கோவையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு குறித்த XX அத்தியாயத்தின் 3.1 ஆம் வாசகம் | கல்விசாரா பணியாட்டொகுதி ஊழியர்கள் 98 பேரின் வரவு மற்றும் வெளியேறுகையை சான்றுப்படுத்தாது மீளாய்வு ஆண்டில் ரூ.239,294,529 ஆன தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் |
| (ஆ) | பொதுத் திறைசேரியின் 1978ஆம் ஆண்டு டிசெம்பர் 19 திகதிய மற்றும் 842 இலக்க சுற்றறிக்கை | 2024 டிசெம்பர் 31ஆந் திகதியன்று கிரயம் ரூ.10,522,212,173 பெறுமதியான நடைமுறை அல்லாத சொத்துகளுக்காக நிலையான சொத்து ஆவணமொன்றைப் பேணிவர தொழில்நுட்பவியல் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2.2.3 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (g) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்கியொழுகாதவாறு செயலாற்றப்பட்டிருந்தது.

2.2.4 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (h) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிறுவகத்தின் வளங்கள் உரிய காலப்பகுதியில் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் மற்றும் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைவாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) நிறுவகத்தை நிலையிருப்புச் செய்து அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் ரூ. 8,821,053,785 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டடத் தொகுதி 2017ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பணிப்பாளரினால் பொறுப்பேற்கப் பட்டிருந்தது. அந்தக் கட்டடத்தை பொறுப்பேற்றபோது மாணவர் தங்குமிட விடுதி கட்டடத் தொகுதியின் கட்டிடம் 02 இல் 26 அறைகள் கொண்ட இரண்டு மாடிகள் நிர்மாணமும் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு மாடிகளில் அறைகள் பிரித்தமைக்கப்படாமலும் அந்த இரண்டு கட்டிடங்களின் கூரைகள் முழுமையாக நிர்மாணிக்க படாத நிலையிலும் அத்துடன் வழங்க வேண்டியிருந்த தளபாட உபகரணங்கள் முழுமையாக வழங்காதிருந்த நிலையிலும் நிறுவகத்தின் பணிப்பாளரினால் பொறுப்பேற்றதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆண்டு தொடக்கம் 2025 ஏப்ரல் வரை நிர்மாணப் பணிகள் முழுமை பெறாத கட்டிடங்களில் கூரைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மிக நீண்ட காலமாக காலநிலை மாற்றங்களைச் சந்தித்ததால் கட்டடங்களின் ஏனைய கட்டமைப்பு களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

(ஆ) தொழில்நுட்பவியல் நிறுவனம் அமைக்கப்பட்டிருந்த நிலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானது என தெரிவித்து அந்த வளவை தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்காக சுவீகரிக்கும் பொருட்டு 2007ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூ 175,326,800 ஆன அரசாங்கத்தின் விலை மதிப்பு தொகையில், வளவை சுவீகரிப்பதற்கான முற்பணமாக ரூ 25,000,000 தொகையை நிறுவனம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தி இருந்தது. பின்னர் குறித்த ஆதனம் அரசாங்க உரியது எனக் கண்டறியப்பட்டபோதும், இலங்கை ஒலிபரப்பு கூட்டு செலுத்தப்பட்ட தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது அந்த வளவை தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்காக சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வு ஆண்டில் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2024 டிசம்பர் 31ஆந் திகதியன்று ரூ. 2,855,429 ஆன புலமைப் பரிசல் நிதியம் மற்றும் 13 வருட காலமாக வேறு 03 நிதியங்கள் கீழ்க் காணப்படுகின்ற மொத்தம் ரூ. 8,125,524 தொகை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கல்வி விடுப்புப் பெற்று வெளிநாடு சென்ற மூன்று ஆசிரியர்களின் 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான உடன்படிக்கைகளும் முறிகளும் மீறப்பட்டிருந்த காரணத்தினால் 2024 டிசம்பர் 31-ஆம் ரூ. 29,762,710 ஆனைத் தொகை வருமதியாக இருந்தது.

(உ) அரசாங்க வங்கி ஒன்றிலிருந்து குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த நிறுவகத்தின் வளவு ஒன்றுக்காக 2018 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அறவாக வேண்டிய நிலுவைக் கட்டணம் ரூ. 725,951 ஆன தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாணவர் உதவித்தொகையாக மாணவர்களுக்குச் செலுத்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டிருந்த ரூ. 6,349,900 ஆன தொகை செலுத்தப்படாத நிலையில் தீர்க்கப்படாத கடன்படுநர் மீதியில் சேர்க்கப்பட்டிருந்தது. அந்தப் பெறுமதியில் ஒரு வருடத்திற்கும் குறைவான ரூ. 1,696,000 தொகையும் ஒன்று தொடக்கம் இரண்டு வருடங்களுக்கு இடைப்பட்ட ரூ. 1,624,000 தொகையும் 02 வருடங்களுக்கு மேல் ரூ.3,029,900 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**ஜீ. எச். டீ. தர்மபால**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில் கடமை)**

## தலைமை கணக்காளர் அறிக்கைக்கு பதில்

**மொரட்டுவை பல்கலைக்கழகத் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் 2024 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டுக்கான நிதிக் கூற்றும் இதர சட்ட மற்றும் ஒழுங்குப்படுத்தல் தேவைகளும் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை**

தாங்களின் 2025 யூன் 25 ஆம் திகதிய HED/C/ITUM/24/FA ஆம் இலக்க 2025.07.01 ஆம் திகதி நிறுவனத்துக்கு கிடைக்கப்பெற்ற மேற்படி அறிக்கைக்கான பதில்கள் பின்வருமாறு.

**2. இதர சட்ட மற்றும் ஒழுங்குப்படுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

(2.2.2 A) தாங்கள் சுட்டிக்காட்டியுள்ள கல்வி சார் பணியாட்டொகுதியினர் கடமைக்கு சமூகமளித்தல் மற்றும் கடமையை விட்டு வெளியேறலை பதியும் நடவடிக்கை வேறெந்த உயர் கல்வி நிறுவனத்திலும் காணப்படவில்லை என்பதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018.11.13 ஆம் திகதிய 1/2018 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு சுற்றுநிருப கடிதத்தின் பிரகாரம் பிரதி மாதந்தோறும் துறைப் பிரதானிகள் மூலம் குறித்த பிரிவுக்குரிய பணியாளர்கள் தொடர்பான பணியாளர் பட்டியல் உறுதிப்படுத்திக்கொள்ளப்படுவதோடு அதன் பிரகாரம் ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(2.2.2 B) தொழில்நுட்ப நிறுவனத்தின் நடப்பு அல்லாத சொத்துக்களுக்கு நிலையான சொத்து ஆவணத்துக்குரிய கணினி மென்பொருள் காணப்படுகின்றது. இது நிறுவனத்தின் பதவி நிலை முகாமைத்துவ உதவியாளரொருவரினால் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு அதனை இற்றைப்படுத்தும் பணிகள் கடந்த 03 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படவில்லை என்ற போதிலும் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் கொள்வனவுச் செய்யப்பட்ட கணக்கீட்டு பக்கேஜுக்கமைய மேற்படி இற்றைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3 இதர விடயங்கள்

(a) தாங்கள் சுட்டிக்காட்டியுள்ள இரண்டு வதிவிட கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படாமை தொடர்பாக ஆராய்வதற்கு பூர்வாங்க விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு அதன் அறிக்கை இன்றளவில் தொடர் நடவடிக்கைகளுக்காக மொரட்டுவை பல்கலைக்கழக மூதவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(b) தாங்கள் சுட்டிக்காட்டியுள்ள ரூ 25,000,000.00 தொகை நகர அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு செலுத்தப்பட்டுள்ளதோடு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் உரித்தை சுவீகரித்தல் தொடர்பாகவும் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(c) ஒவ்வொரு வருடத்திலும் ஏற்புடைய புலமைப் பரிசில் நிதியத்தின் பிரமாணங்களுக்கமைவாக தகைமை பெறுகின்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதோடு 2024 ஆம் ஆண்டிலும் அவ்வாறு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

தாங்கள் சுட்டிக்காட்டியுள்ள ரூ 8,125,524.00 பெறுமதியான 03 நிதியங்களையும் நிலையான வைப்புகளில் முதலீடு செய்து வரும் வட்டித் தொகையை கப்பற்றுறை கற்கைப் பிரிவின் சில மீண்டு வரும் செலவுகளுக்கும் நூல்களை கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

(ஈ) தாங்கள் சுட்டிக்காட்டியுள்ள உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளை மீறியுள்ள 03 விரிவுரையாளர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகையை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

I. விரிவுரையாளர் திருமதி து.ர் உமார்லெப்பே – சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மூதவையின் ஒப்புதல் கிடைத்துள்ளதோடு தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

II. விரிவுரையாளர் திருமதி ளு. ராஜகோபாலன் – பிணைமுறித் தொகையை குறிப்பிட்டு சேமலாப நிதிய விண்ணப்பங்களுடன் அனுப்பப்பட்டுள்ளதோடு குறித்த பிணைமுறித் தொகையை ஈடு செய்வதற்கு சேமலாப நிதிய கணக்கில் போதுமானளவு நிதி காணப்படுகின்றது.

III. விரிவுரையாளர் ர்.வு.ளு ஜயலத் – சேமலாப நிதியத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடுஇ நிலுவைத் தொகையை அறிவித்த பின்னர் தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு குறித்த விரிவுரையாளர் இணக்கம் தெரிவித்து எழுத்துமூலமாக அறிவித்துள்ளார்.

(உ) தாங்கள் சுட்டிக்காட்டியுள்ள அரச வங்கிக்குரிய மின் கட்டணம் தொடர்பாக ஆராய்வதற்கு பூர்வாங்க விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு மேற்படி குழுவின் கணிப்பின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தொகை ரூ 725,951.20 ஆகும். மேற்படி தொகையை அறிவிடுவதற்கு இலங்கை வங்கியுடன் இன்றளவில் பேச்சுவார்த்தை நடாத்தப்படுகிறது.

(ஊ) கணக்குகளில் காட்டப்பட்டுள்ளவாறு தீர்க்கப்படாத புலமைப்பரிசில் நிதியங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு சகல நிலுவைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து குறித்த சீராக்கல்களை மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இந்த விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அலுவலர்களுக்கு மேற்படி கணக்காய்வு விசாரணைகளுக்கு உட்படாது பணியாற்றுவதற்கு அறுவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்
தொழில்நுட்பவியல் நிறுவனம்,
மொரட்டுவை பல்கலைக்கழகம்.

Institute of Technology, University of Moratuwa,
Diyagama, Homagama, Sri Lanka

Tel: (+94) 112 124 000

Web: www.itum.mrt.ac.lk